உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

லோகச்செந்தூரம் நா–க்கு

சூஸ்திரம் 150,

ஷ சுருக்கம் ருயரு.

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்வான்

மு. குழந்தைவேலுப் பிள்ளை அவர்கள்

சேட்டுக்கொண்டபடி

மதுரை வித்துவான்

த. குப்புசாமிநாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

குருசாமிக்கோனர்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி,

ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1926.

இதன் விலை] [அணா 10.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்.

உ

கடவுள் துணை.

யர்கோபு திருவாய்மலர்ந்தருளிய

செந்தூர சூஸ்திரம் ாரும்

S 250

பருதிமதி உலகத்தைப் படைத்தோன்தன்னைப்
        பதம்பணிந்து அனுதினமும் நினைவிற்பூண்டு
கருதியே தொழுதிறஞ்சி எந்நாளுந்தான்
        கருணைவைத்து எழுனூறு பாடிப்பின்பு
வருதிட்ட இரண்டுமுன் னூறுபாடி
        வகையாகக் குருக்கிறூற் றைம்பதாக
உருதியாய் வகாரமெல்லா மிந்தநூலில்
        உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் யாகோப்தானே. (1)

சொல்லிவிட்டேன் கல்லுப்பு வெடியுப்போடு
        சொற்பெரிய ரசபற்பந் தாரபற்பம்
வல்லமையாய்ப் பாஷாண பற்பமோடு
        வகைவகையாய்க் கட்டுகின்ற மார்க்கத்தோடு
கல்லான களங்குகொண்டு செந்தூரங்கள்
        கருத்துவைத்துக் கைபாக வரிசையாக
புல்லறிவாற் செய்பாகம் பாடினேன்பார்
        போக்கான வாதிகளே புகலக்கேளே. (2)

புகலுகிறேன் உப்பைவிட்டோர்க் கில்லைவாதம்
        பொன்செய்ய அறியார்கள் பிரட்டுவாதி
நகலுகிறோம் கண்டருக்குள் செம்பெடுக்கார்
        காட்டியே மதிபழுக்க நலமுமில்லை
வகலுகிறேன் வாய்ப்பேச்சா லொன்றுமில்லை
        வலுவில்லை சுடுவார்கள் வணக்கங்கெட்டோர்
பகலுவார் பொன்கொடுத்தாற் செம்பாய்ச்செய்வார்
        பக்தியில்லார்க் கொன்றுமில்லை பாரிலோர்க்கே. (3)

பாரிலே யிருக்கவென்றால் வாதம்வேணும்
பகாரிய செடமெடுத்த அதிட்டத்தாலே
தூரிலே நீரேறில் மரமுமாகும்
தூரில்லா மரமாமோ தூக்கிப்பாரு
வேரிலே நீரிருந்தால் காயுங்காய்க்கும்
வில்லிருந்தால் அம்புதைக்கும் விதத்தைப்போல
ஆரிலே தூரிருந்தால் தெப்பம்வேணும்
அதைப்போலே உற்றுப்பா ரறிவாற்றானே. (4)

உப்புக்கட்டு.

அறிவாக உப்பொன்று சொல்லக்கேளு
ஆடலாம் வெகுகோடி வித்தைதானும்
குறியாக வாதமாம் பொன்னுமாகும்
குணக்கேடு சொன்னக்கால் வாதமாமோ
சரியாக உப்பதுவுங் கட்டினக்கால்
சாட்சியாஞ் சரக்கையெல்லாங் கட்டுங்கட்டும்
பரியாகு மென்றுசொன்ன யாகோபென்பேர்
பார்த்துணர்ந்து பாரிலேதான் பகர்ந்திட்டேனே. (5)

பகர்ந்திட்டேன் கல்லுப்புப் படியுமொன்று
பழச்சாறு தன்னைவிட்டு ஒட்டக்காய்ச்சி
வகர்ந்திட்டேன் மேனிச்சார் விட்டரைத்து
வகையாகப் புடமொன்று போட்டெடுத்து
நகர்ந்திட்டு அருக்கனீபால் விட்டரைத்து
நல்லவில்லை பண்ணியபின் கதிரில்வைத்து
பிகர்ந்திட்டுக் காய்ந்தபின்பு புடமுமிட்டால்
போான கசிவிறந்து பிலக்கும்பாரே. (6)

பிலக்குகின்ற உப்பெடுத்துச் சேருமொன்று
பின்புதான் ரசபதங்கந் தன்னைத்தானும்
நலக்குவேன் வெண்கருவா லரைத்துஉண்டை
நலமாகப் பலமொன்று கதிரில்வைத்து
கலக்குமே ரசவுண்டை மேலேதானும்
கனிவாகக் கசிவத்த உப்பைக்கட்டும்
துலக்குமே கரியோட்டில் வாட்டிக்கட்டு
துப்பரவாய்க் கட்டியபின் சொல்லக்கேளே. (7)

சொல்லவே கரியுப்புப் படியும்நாலு
சுருதிபெற ஒட்டிரெட்டி மேனிச்சாறு
நல்லாக இடித்துபிழிந் துப்பில்விட்டு
நலமாகக் காய்ச்சிடவே தெரிப்படங்கும்
மெல்லஅதைப் புடமிட்டு எடுத்துக்கொண்டு
மேன்மைபெறச் சட்டிரெண்டும் உரசிச்சேர்த்து
பொல்லாத உண்டைதனை நடுவேவைத்துப்
பின்புதான் மேனியுப்பை அதிலேபோடே. (8)

போட்டுநீ யமுழ்த்தியுமே மேலேசட்டி
போக்கோடே மூடியபின் சொல்லக்கேளு
நாட்டுமே சீலைசெய்து வலுவாகத்தான்
நல்சட்டி அடுப்பேத்தி எரிப்புச்சாமம்
நாட்டுமே உள்ளிருந்த பாதரசந்தானும்
நயமாகக் கவசித்த உப்புக்குள்ளே
விட்டுமே சொக்கியது குருவுமாகும்
வேதாந்தக் குருவாக விளங்கும்பாரே. (9)

விளங்கவே சொக்காமல் மேலேயேறி
வீற்றிருந்தால் பழையபடி முன்சொன்னாப்போல்
தளங்கவே உண்டைசெய்து கவசங்கட்டி
தாட்டிகமாய்ப் பழையபடி யெரித்துத்திரு
துளங்கவே யிப்படிக்கு உயரேறாமல்
தொகுத்துமே உப்பிலே சொக்கிச்சென்றால்
புளங்கவே யெடுத்துவைத்துப் பூசைபண்ணு
புலம்பாதே யென்றுசொன்னார் யாகோப்தானே. (10)

என்றுமே செம்புதனிற் பத்துக்கொன்று
இதமாகக் கொடுத்தூதி வெள்ளியெட்டில்
நன்றாக ரெண்டுயிடு ஏமமாகும்
நலமாகக் கொடுத்துருக்கிப் பார்க்கும்போது
அன்றுமே மாத்தாறு காணும்நல்ல
அடைவாகப் பார்த்துமே செலவுசெய்து
இன்றுமே யின்னமொன்று சொல்லக்கேளு
திடமாக யாகோபு சொன்னவாறே. (11)

சொன்னதொரு முன்னெரித்த உப்புதன்னைச்
சுகமாகக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
நன்னயமாய்ப் பொன்போலே கண்விட்டாடும்
நலமாகக் கரியதுவுங் குடியாதப்பா
இன்னமொன்று சொல்லுகிறேன் குகையிலிட்டு
இதமாக நாலுருக்கிப் பின்புதானும்
தன்னைப்போல் தங்கமது ஒன்றுதாக்கு
தங்கம்நின்று உருகையிலே நாகந்தானே. (12)

நாகந்தா னிடைபாரு தங்கத்துக்கு
நலமான களங்காகும் நாட்டுள்ளோர்க்கு
பாகமா யெடுத்துநீ சொல்லக்கேளு
பாய்ச்சிடுநீ ரவிநூற்றில் ஒன்றுதானும்
வேகமாய்ப் பழுத்துவிடும் எடுத்துவித்து
விதமாக உண்டுடுத்திப் பின்புகேளு
நாகமாங் களங்கத்தைச் சேர்த்துருக்க
நன்மையாய்க் கூறுகிறேன் யாகோப்தானே. (13)

தன்மையாய்க் களங்கதுவுங் களஞ்சிலொன்று
தடையறவே ரசபதங்கம் இடையுங்காலாம்
உண்மையாய்க் கெந்திபது பலமுங்காலாம்
உறுதிபெறக் கல்வத்தி விட்டுக்கேளு
வெண்மையா மேனிச்சாறு தன்னாலாட்டி
வித்தகனே காசியென்ற மேருக்கேற்றி
பண்மையாய்ப் பன்னிரண்டு சாமந்தானும்
பதியவெரி பின்புதான் பகரக்கேளே. (14)

பகரவே முருக்கம்பூப் போலேகாணும்
பகரப்போ காதெடுத்துப் பூசைபண்ணி
உகமையில்லாச் செந்தூரந் தன்னையப்பா
உரவான செம்பதிலே நூற்றுக்கொன்றீய்
பகரவே செந்தூரம் ஒன்றுபோட்டால்
பழுமைபெற இருபத்து ஐந்துமாத்து
உகரவே வெள்ளியுந்தா னிடையேசேர்த்து
உருதிபெறத் துணிந்துநீ உன்றிடாயே. (15)

உண்ணவே பணவிடைதான் தேனிலுண்ண
        உசாந்தவரை தேகமற கற்றாணாகும்
கண்டுநீ மேனியது செவ்வலரிபோலாம்
        கருத்துடனே புளியுப்பு எண்ணெய்தள்ளு
பண்டுமே மண்டலந்தான் உண்டுதேரு
        பதினாறு வருஷம்போற் பாலையாகும்
கொண்டுமே யாகோபு கூறினார்பார்
        குவலயத்து வாதிக்குக் கூறொணாதே. (16)

கூரொண்ணா உப்பைமுந்திக் கட்டியாடும்
        குவலயத்தில் பாஷாண மெல்லாங்கட்டும்
வாரொண்ணா இரதமது ஏவல்கேட்கும்
        வழிபோடே உப்பைமுந்தித் தெரிப்படக்கி
பாரொண்ணாப் பார்தனிலே புடமுமிட்டு
        பகர்ந்தவெடி யுப்பையிட்டுப் பரிந்துநல்லாய்ச்
சீரொண்ணாக் கைபாக வரிசையாகச்
        செய்திட்டார் செய்தியுமாந் தெரிந்துபாரே. (17)

வெள்ளி வித்தை.

தெளிந்துபா ரின்னமொரு வெள்ளிவித்தை
        செப்புகிறேன் மார்க்கமதைத் திறமாய்ப்பாரு
வளிந்துமே வெள்ளையென்ற பாஷாணந்தான்
        வகையாக ஒருசேரு வாங்கிவந்து
களிந்துமே வெள்ளாவி தன்னிலிட்டுக்
        கசடகற்றிப் பின்னுமொரு கருத்தைக்கேளு
தளிந்துமே ரசபதங்கம் சேருவொன்று
        தப்பாம லிடைசமனாய்ச் சேர்த்துக்கொள்ளே. (18)

சேர்த்துமே வெண்கருவாற் சாமமாட்டித்
        திரமாக உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
பார்த்துமே மூன்னுப்புச் சேரிரண்டு
        பதிலாக அருக்கன்பால் தன்னாலாட்டி
கார்த்திடவே உண்டைமேல் கவசங்கட்டிக்
        கதிரில்வைத்து அனலில்காய்ச்ச யிருகிப்போகும்
வார்த்திடவே யிருசட்டி உரசிச்சேர்த்து
        வகையாக நடுவிலிடு உண்டைதானே. (19)

உண்டைவைத்து முன்னுப்புச் சுத்தும்கொட்டி
உறுதியா யமுழ்த்தீ அடுப்பிலேற்றி
குண்டாக முச்சாம மெரித்துவாங்கிக்
குளிரவைத்துச் சட்டிதனைத் திறந்துபார்க்க
முண்டையைப்போ லேறியேதா னிருக்கும்பாரு
முடிவாகச் சுரண்டியே கல்வமிட்டு
கண்டிடாய் கள்ளியென்ற பாலைவிட்டுக்
கணக்காக யிருசாம மரைத்துக்கொள்ளே. (20)

அரைத்ததனைக் கதிரில்வைத்து உண்டைசெய்து
அடைவாக முன்னுண்டை கல்வத்திட்டு
இரைத்துஅரை முனபாலாற் சாமம்நாலு
இதமாக அரைத்துவுண்டை மேலேகட்டி
வரைத்துமே முன்சட்டி நடுவில்வைத்து
வளமாக முன்னுப்பு மரைத்துமூடி
கரைத்துமே முன்போலே மூடிநீயும்
கடுமையா யெரித்திடவே பாகமாமே. (21)

அண்டச் சுண்ணம்.

பாகமா யிப்படிக்கு ஏறஏற
பதிவாக யெரித்துமே பகரக்கேளு
பாகமாய் உப்பினுட கவசத்தோடே
பாங்காகச் சேர்த்துமே ஊடுருவிப்போகும்
தாகமா யெடுத்துமே சாற்றக்கேளு
தடையறவே வெள்ளீயம் சேருலன்று
மோகமாய் முட்டையென்ற தோடுமொன்று
முடிவாக உவர்மண்ணு முடியவாங்கே. (22)

வாங்கியே சுண்ணும்பு யிடையேசேர்த்து
வகையாகப் பாணியது ரட்டியிட்டு
தாங்கியே குமுரளரி ஓடுதானும்
அதனிலுள்ள எண்ணெய்யது கழறும்நன்றாய்
பாங்கியே அம்மியிட்டு வெண்கருவாலாட்டிப்
பரிவாக வில்லைசெய்து கதிரில்வைத்து
தூங்கியே திரியாமல் பெரும்புடமாய்ப்போடு
தொல்லுலகிற் கடுஞ்சுண்ண மாகும்பாரே. (23)

ஆகுமென்ற அண்டோடு சுண்ணந்தன்னை
அம்மியிட்டுச் சீனத்தைப் பொரித்துநீற்றி
வாகுபெற அண்டமென்ற சுண்ணம்ரெண்டு
வகையான சீனத்தின் பொரியுமொன்று
தாகுபெறச் சேர்த்திட்டு அண்டநீரால்
தனையரைத்து உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
பாகுபெறப் பெரியபுடம் போட்டுவாங்கில்
பதிவான சுண்ணும்பு பாரிலோர்க்கே. (24)

பாரிலே அண்டமென்ற சுண்ணந்தன்னைப்
பதிவாகப் பொடியாக்கிச் சொல்லக்கேளு
வாரியே ஒருகுகையில் வெள்ளீயத்தை
வளமாக இட்டுமே மேலேதானும்
காரியமாய் வெள்ளீயம் மேலேயிட்டுக்
கதியாக அதின்மேலே அண்டச்சுண்ணம்
சாரியா யிட்டுமே உலையில்வைத்துத்
தாட்டிகமாய்க் குகைசிவக்க ஊதிப்போடே. (25)

கொட்டிவிடு மருந்துகளை முன்போல்வைத்துக்
குணமாகக் குகைகருக்க ஊதிப்போடு
தீட்டியே யிப்படிக்கு ஊதஊத
நிறமான நீரெல்லாம் யீயம்கக்கும்
மூட்டியே அதையெடுத்துத் தட்டிப்பார்க்க
மூவுலக மெச்சவுமே சத்தம்கேட்கும்
வட்டியே வெள்ளீயம் கட்டும்நன்றாய்
வண்மைபெற யாகோபு வழுத்தினாரே. (26)

வழுத்திடவே வெள்ளீயம் சேருவொன்று
வகையாகக் குகையினிலே வைத்துருக்கி
தழுத்திட்ட உப்பினூற் கட்டுகின்ற
தடையற்ற வெள்ளைப்பா ஷாணந்தன்னை
கழுத்துமே விராகனிடை பொன்றுபோடு
காரணமாய் வெள்ளீயம் தோசைபோலே
இழுத்திட்டு உருகியுமே வெள்ளியாகும்
இன்பமா யாகோபு யிலம்புவேனே (27)

சொன்னதொரு கைபாக வரிசையாலே
சுருதிபெறும் யாகோபு செய்ததுண்டு
நன்னயமாய்ச் செய்தவர்கள் பிழைத்துப்போனர்
நான்கண்டு உலகத்தோர்க் காகச்சொன்னேன்
இன்னபடி யிந்நூலைக் கண்டுதேரி
இதமாகச் செய்தாக்காற் பலனுமாகும்
முன்னமே பாஷாணங் கட்டிநன்றாய்
முடிந்தமட்டும் வெள்ளிமுறை பார்த்திடாயே. (28)

பார்த்திடவே இன்னமொரு வெள்ளிவித்தை
பாடுகிறேன் புத்தியுள்ள அன்பருக்கு
ஏத்திடவே சொல்லுகிறேன் பாகமாக
எவனேபா வாதிமார் செய்குவார்கள்
நாத்திடவே யிப்பாக மறிந்துகொள்ளு
நாட்டிலே சொல்லாதே நல்லதாகும்
சாத்திவிட்டே னிந்நூலிற் பாகந்தன்னைச்
சரியாகப் பார்த்திட்டா லெல்லாமாமே. (29)

ஆமேதான் வெள்ளீயம் பலமும்பத்து
அந்திடைக்கு அரபொடியும் பலமும்பத்து
தாமேதான் இதுவிரண்டுங் குகையிலிட்டுத்
தப்பாம லுருக்கிடவே வெள்ளிபோலே
காமேதான் நாடியே கல்வத்திட்டு
கணக்காக யதையுடைத்துக் கொடியோன்றன்னை
பாமேதான் பாதிசேர்த்து அரைத்துக்கொள்ளு
பண்பாக வெண்கருவா லரைத்துஆட்டே. (30)

ஆட்டியே புடம்நாலு தேர்ந்தபின்பு
அதையெடுத்துச் சாரம்நாலி லொன்றுதாக்கு
சாட்டியே குகையிலிட்டு உருக்கித்தீரு
சரியாக அயக்கசடு நீங்கிநன்றாய்
மூட்டியே தும்பைப்பூப் போலாம்வெள்ளை
முறையாக யிருபத்தி ஐந்துமாத்து
தாட்டிடவே வெள்ளியிடை செம்புசேர்த்துத்
திருசாக உருக்கிடவுஞ் சொல்லக்கேளே. (31)

சொல்லவே முன்சொன்ன பாஷாணத்தைச்
 சிறப்பாக விராகனிடை ஒன்றுயீய்ந்தால்
வெல்லவே வெள்ளியது பத்துமாத்து
 மேதினியோர் தன்னிடத்திற் சொல்லொணுது
கல்லவே சீவனத்துக் கிடமேபண்ணு
 கதிபெறவே உண்டுடுத்து கண்டிப்பாக
நல்லாக யிருந்துவிடு யாகோபுசொன்ஞர்
 நலமாக யின்னமொரு வரிசைகேளே. (32)

வரிசையா யின்னமொரு வெள்ளிவேலை
 வளமாகச் சொல்லுகிறே னன்புள்ளோர்க்கு
தரிசையாய் வெள்ளீயம் பலமோபத்து
 தக்கதொரு அரபொடியும் பலமோபத்து
கரிசையா யிரண்டுமொன்று யுருக்கிக்கொண்டு
 கலமான கல்வத்திற் கொட்டிக்கொண்டு
புரிசையாய் வெள்ளையென்ற பாஷாணத்தைப்
 போக்காகப் பலம்பத்து கூட்டிக்கொள்ளே. (33)

இட்டுமே பாணியினுல் நேகஆட்டி
 இதமாகக் குகையிலிட்டு உருக்கிப்பாரு
நட்டுமே வெங்கலம்போ லுருகிநிற்கும்
 நலமாக எடுத்துமே கல்வத்திட்டு
பட்டுமே காரீயம் பாதிசேர்த்துப்
 பதிவாகப் பாணியினு லரைத்துவில்லை
செட்டுமே செய்துநீ கதிரில்வைத்துச்
 செயமாகப் பெரியபுடம் போட்டுக்கொள்ளே (34)

கொள்ளவே குகையிலிட்டுக் குமுராஊது
 குகையாரி யெடுத்துப்பார் வெள்ளிபோலே
துள்ளவே ஓசையுடன் நிறத்தைக்கேளு
 துடியாகத் தும்பைப்பூப் போலேயாகும்
எள்ளவே வெள்ளீய மிடையேசேர்த்து
 ஏகமாய்ச் சேர்த்துருக்க வெள்ளியாகும்
உள்ளபடி சொன்னதிந்த வெள்ளிதன்னை
 ஒழுங்காக வித்துமே உண்டிடாயே. (35)

உண்டிடவே வெள்ளிவித்தை யுண்மையாகும்
ஒருவருடன் சேராமற் செய்துகொள்ளு
கண்டிடவே ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
காரியமாய்க் கவர்கோடி வேதைகோடி
உண்டிடவே இந்தவிதஞ் சிவனங்கள்
முக்கியமாய்ச் செய்துவிடச் சொன்னேன்பாரு
அண்டிடவே சிவனங்கள் பண்ணிக்கொண்டு
ஆண்டவனைத் துதிசெய்து அடுத்துவாழே. (36)

அடுத்துமே வாழ்வதற்கு மக்காநாட்டில்
அடைவான நபிமார்கள் மெத்தஉண்டு
தொடுத்துமே அவர்களுக்கு வாதமுண்டு
துடியான வெள்ளியுட வேலைசெய்வார்
குடுத்துமே விற்றிடுவார் செலவுசெய்வார்
குணமான மனக்காரர் அவரைக்கண்டு
தடுத்துமே பணிந்துகொண்டு நானேகற்றேன்
தடையில்லா யாகோபு சாதித்தேனே. (37)

சாதித்தேன் வடமொழியைக் கண்டுதேறி
சமத்தாக இசுலாத்தி லிருந்துகொண்டு
வாதித்தேன் பிசுமில்லா ரகிமானென்று
வளமாகத் தோத்திரமது மிகவும்பண்ணி
போதித்தேன் பதினெட்டுச் சித்தரோடே
புகலரிய அவர்களுடன் மலையிலேறி
கீர்த்திபெற யாகோபு யென்றபேரு
கீர்த்திபெற வசனித்தேன் குணமிதாமே. (38)

குணமான வெள்ளிக்கு வெள்ளிவித்து
கூடினலப் பெண்ணுக்குப் பெண்ணேவித்து
பணமான பொன்னுக்குப் பொன்னேவித்து
பதிவான சத்துக்கு துருசுவித்து
வனமான மாத்துக்கு மாத்தேவித்து
வடிவான மனதுக்கு ஆத்மாவித்து
தனமாக இவ்வாறே யெல்லாமாச்சு
தாட்டிகமா யாகோபு தான்சொன்னாரே. (39)

சொன்னதொரு வெள்ளிவித்தை ஒன்றுகேளு
சுருக்காகும் இவ்வகை சூட்சமாகும்
நன்னயமாய் முன்சொன்ன பாஷாணத்தை
நலமாகப் பலம்நிறுத்துக் கல்வத்திட்டு
கன்னயமாய்க் கள்ளிப்பால் தன்னாலாட்டிக்
கடுமைபெற யிருசாம மாட்டிப்பின்பு
வன்னயமாய் வெள்ளீயம் பலமுமொன்று
வகையாகத் தகடடித்து மருவிக்கேளே. (40)

மருவவுமே முன்னரைத்த குருவுதன்னை
மார்க்கமாய் வெள்ளீயத் தகட்டிற்பூசி
கருகவுமே புடமதுவு மூன்றுபோடு
கன்னியமாய்த் தவளநிற மாகும்வெட்டை
அருகிலே வெள்ளீயங் கட்டிப்போகும்
அதையெடுத்துக் குருவாக வைத்துக்கொண்டு
தருகியே குகையிலிட்டு வெள்ளிதன்னை
தாக்கிடுநீ யிடைக்கிடைதான் வெற்றியாமே. (41)

வெற்றியா யிருக்கவென்றால் வெள்ளிவித்தை
விரும்பியே வைத்துப்பார் விளக்கமாகும்
முத்திதருங் கியானம்வரும் யோகமார்க்கம்
முனிவருக்கும் பெலனாகும் முத்தியுண்டு
சித்திதரும் உண்டுடுத்தி யிருக்கலாகும்
சீர்பெருகி யெல்லாமுஞ் சித்தியாகும்
சத்தியமா யுழைத்தாக்கால் யெல்லாமுண்டு
சாத்தியமா யாகோபு தான்சொன்னாரே. (42)

சொன்னதொரு சேருழுது பரம்படித்துச்
சொற்பெரிய விரைதெளித்து முளைத்துநிற்க
நன்னயமா யதைப்பிரித்து நட்டுப்பின்னே
நன்றாகக் களையெடுத்துப் பலன்கொடுக்க
உன்னதமா யொன்றுக்குப் பத்துநெல்லு
உன்னிதமாய்ப் பலன்கொடுத்த மார்க்கம்போல
இந்நிலத்தில் ரசவாதம் நெல்லுப்போலாம்
இருந்துரைத்தார் யாகோபு யிதமாய்த்தானே. (43)

இதமான வாதங்கள் வேணுமென்றால்
　　இதமான கல்லுப்பை யிருக்கிக்கட்டி
பதமான பாஷாணச் சரக்குமேலே
　　பதமாகக் கட்டியே பெரித்துக்கொள்ளு
இதமாக இப்படிக்குக் கட்டுமாகும்
　　எனையாண்ட நபிமாரின் ஆட்டுஆட்டு
சாதகமாய் நான்கண்டு தேரினேனென்பார்
　　சத்தியமா யாகோபு சொன்னேனென்பாரே. (44)

சொன்னதொரு வெள்ளிதனைச் சிறக்கச்செய்து
　　சொகுசாக வித்துமே சேவைசெய்து
இன்னிலத்தில் எழுநூறு முடியப்பார்த்து
　　இதமாக இரண்டுமுன் னூறைப்பார்த்து
கன்னமதா யிந்தநூல் தன்னைப்பார்த்து
　　கருத்துறவே ஒருவேலை கண்டுகொண்டால்
பன்னகமா யறிவாக யிருப்பீர்கண்டாய்
　　பாக்கியவான் யாகோபு பரிவாய்த்தானே. (45)

உப்புக்கட்டு.

பதிவாக உப்பொன்று பகரக்கேளு
　　பண்பாக யிந்தஉப்பு பெலனைப்பார்த்தால்
மதிவான கல்லுப்புச் சேருநாலு
　　மயலான எலுமிச்சம் பழச்சாறுதன்னை
வதிவாகச் சேர்பத்து விட்டுஆட்டி
　　வடிவாகக் காய்ச்சிடவே கரைந்துநிற்கும்
கதிவேறு யில்லாமல் சீலைதன்னைக்
　　கட்டியாய் வடிகட்டி ஒட்டக்காய்ச்சே. (46)

காய்ச்சியே கல்வமிட்டு அரைத்துக்கொள்ளு
　　கனிவாக நாயுருவி சமூலம்வாங்கி
பாய்ச்சிஉர லதனிலிட்டு யிடித்துச்சாறு
　　பதிவாக வாங்கியே சீஷாதன்னில்
வாச்சியே அடைத்திட்டு முன்னுப்பைக்கல்வம்
　　வகையாக இட்டுயிந்த நீராலாட்டி
தாச்சியே வருத்திட்டு கலயத்திட்டு
　　தடையறவே புடம்போட்டு எடுத்துக்கொள்ளே. (47)

எடுத்துமே கல்வமிட்டு முன்னீராலே
யிழுத்தரைத்து உமிநெருப்பில் வருத்துப்போடு
அடுத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போடு யிப்படிக்கு
தடுத்துமே பேசாதே சுண்ணமாகும்
தடையறவே போட்டுமே தன்மையாக
விடுத்துமே கடுஞ்சுண்ண மாகுமட்டும்
விதமாகப் போட்டிடவே செயமுமாமே. (48)

செயமான கல்லுப்புச் சுண்ணமானால்
செல்வம்வரும் உபரசங்கள் சுண்ணமாகும்
மயமான சரக்கெல்லாம் கெஞ்சிக்கட்டும்
மாட்டுகிற கருவுண்டு உப்பினாலே
நயமாகும் வங்கமது சுண்ணமாகும்
நானிலத்திற் சொன்னதொரு நேர்மைதன்னை
பயமாக உப்பைமுந்திக் கட்டிப்பாரு
பதிவாக எல்லாமுஞ் சித்தியாமே. (49)

வங்கச்செந்தூரம்.

சித்தியது வாகவென்றால் கருவங்கத்தைச்
சீர்பெறவே சேர்துவும் கல்வத்திட்டு
நத்தியே நீநன்றாய்த் தட்டிக்கொண்டு
நயமான சுண்ணத்தால் நய்ய ஆட்டி
முத்தியாங் கல்லுப்புச் சுண்ணம்நேரே
முடிவாகப் போட்டுமே முச்சாமந்தான்
பத்தியாய் ஆட்டிவில்லை கதிரில்வைத்துப்
பதிவான யாகோபு பகர்ந்தவாரே. (50)

பகரவே பெரும்புடமாய்ப் போட்டுவாங்கிப்
பதிவாக எடுத்துமே கல்வத்திட்டு
நகரவே முன்சாற்றால் நேகஆட்டி
நலமாக வில்லைதட்டிப் புடமும்போட்டு
தகரவே யிப்படிக்குப் புடமும்பத்து
தாட்டிகமாய் முன்போலே புடமுமிட்டு
வகரவே வங்கமது செந்தூரமாமே
வகையாகக் கல்வமிட்டு மார்க்கங்கேளே. (51)

மார்க்கமாய் வங்கமென்ற செந்தூரத்தில்
மலக்கமாய் நாலிலொன்று வீரங்கூட்டி
ஆர்க்கமாய் முன்னீரா லறைத்துவில்லை
அடைவாகக் கதிரில்வைத்துப் புடமுமிட்டால்
ஏர்க்கவே வங்கமென்ற ராசதானும்
ஏத்தியே வைத்ததெல்லா மாண்டுபோகும்
கார்க்கவே கல்வமிட்டு மடைந்தைதன்னைக்
காரணமாய்ப் பாதிநீ சேர்த்துக்கொண்டு
வார்க்கவே முன்னீரால் சாமமாட்டி
வடிவாக முன்கவசம் வலுக்கக்கேளே. (52)

வலுக்கவே சுண்ணும்பு உப்புநேரே
வகையாகச் சட்டிக்கதிர் காயவைத்து
தளுக்கவே சேவலென்ற புடமுமிட்டால்
தான்வங்கஞ் சிவந்துமே குருவுமாகும்
அழுத்தமா யிருக்குமந்தச் செந்தூரத்தை
அடைவான ரவியுருக்கி நூற்றுக்கொன்று
பழுத்துமே தங்கமது வாகும்நேர்மை
பதிவான யாகோபு சொன்னவாரே. (53)

சொன்னதொரு வங்கசெந் தூரம்வைத்துச்
சொற்பெரிய நபிமார்கள் மக்காதன்னில்
நன்மையா யுண்டுடுத்தி வேதந்தன்னை
நாட்டியே படித்திடுவார் நல்லமார்க்கம்
சின்னமில் லாமல்வெகு புத்திபுள்ளோர்
சீமானு யிருந்திடுவார் சிறியோரெல்லாம்
முன்னமே வெகுநாளாயவ் விடமேபோனேன்
முத்திக்கு வழிசொன்னேன் யாகோப்நானே. (54)

நானென்ற நபிமார்கள் முன்னேதானும்
நாட்டிலே பேர்கொடுத்து வெகுநாள்தொண்டு
வானென்று மனமகிழ்ந்து ஒருநாட்சொன்னார்
வகையான கல்லுப்பின் வேதைமார்க்கம்
கானென்ற தாம்புரத்தின் வேதைபோட்ட
கதையதனை யின்னூலிற் கருதிச்சொன்னேன்
பானென்ற கர்த்தாவின் நோக்கத்தாலே
பகர்ந்திட்டேன் யாகோபு பரிவாய்த்தானே. (55)

பரிவாகப் பாறையுப்புப் பலமும்பத்து
பாக்குப்போ லுடைத்துமே சொல்லக்கேளு
நரியான சுக்கான்கல் ஊதிநீயும்
நலமாகா பெருஞ்சட்டி பாதியிட்டு
பிரியான பாறையுப்பை யதின்மேல்வைத்துப்
பின்புசுற் சுண்ணமதை அதன்மேற்கொட்டி
துரிதமா யமுழ்த்திபின் அடுப்பிலேத்தித்
தொக்களரி பனிரெண்டு சாமந்தானே. (56)

எரித்தனே யெடுத்துப்பார் தெரிப்படங்கி
இதமாக நீர்வத்தி யிருக்கும்பாரு
வரிந்துமே யெடுத்ததனைக் கல்வத்திட்டு
வகையாக எருக்கம்பால் தன்னிலாட்டி
பரிந்துமே வில்லைதட்டிக் கதிரில்வைத்துப்
பலமாக புடம்போடக் கசிவுமாகும்
கரிந்துமே வாதரசம் எழுநூறுதன்னில்
காட்டினே னதின்செயலின் நடப்புக்கேளே. (57)

கேளுமே லிங்கரசம் பலமும்பத்து
கெடியாகக் கல்வத்தி லிட்டுநீயும்
மாளவே அண்டவெள்ளைக் கருவாலாட்டி
வளமாக உண்டைபண்ணி மேலேகேளு
தாளுமே முன்சொன்ன உப்புதன்னைத்
தாட்டிமையாய் மேலேநீ கவசங்கட்டி
தூளுமே வலுவாக ஒட்டிரெட்டித்
துடியாகக் கட்டியே கதிரில்வையே. (58)

வைத்துமே கல்லுப்புப் படியும்ரெண்டு
வளமாக மேனிச்சாறு தன்னாலாட்டி
கைத்துமே புடமிரண்டு போட்டுக்கொள்ளு
கனமாகக் கட்டிவிடும் பின்புகேளு
பைத்துமே யிரண்டுசட்டி உரசிச்சேர்த்து
பதிவான உண்டைதனை நடுவேவைத்து
கைத்துமே மேனிச்சாறு புடமும்நல்ல
கனிவாக உப்புமேல் சுத்திப்போடே. (59)

போட்டுமே அமுழ்த்திரன்றாய் மேலேசட்டி
பொருக்கவே முடித்துமண் சீலைசெய்து
காட்டுமே அடுப்புதனி லேத்திநல்ல
கனிவாகப் பனிரெண்டு சாமந்தானும்
வாட்டுமே யெரிவன்னிப் பதங்கந்தானும்
வளமான கவசத்திற் புகுந்துகொள்ளும்
நாட்டுமே மேற்சட்டி மல்லாத்திட்டு
நலமாகப் பார்த்திடத்தும் பைப்பூப்போலே. (60)

தும்பையென்ற பூப்போலே உயரகிற்கும்
துடியாகச் சுரண்டியதைக் கல்வத்திட்டு
வம்பாக வெண்கருவால் நேகேஆட்டி
வளமாகக் கட்டிக்கதிர் காயவைத்து
நம்பிநபி அடிபோற்றிக் கவசங்கட்டி
நாட்டியே கதிர்தனிலே காயவைத்து
தம்பமாய் முன்போலே சட்டியிட்டுத்
தடையறவே முன்போலே சாற்றக்கேளே. (61)

சாற்றவே முன்போலே எரித்துவாங்கிச்
சரியாக ஏரஏர இப்படியேசெய்து
பாற்றவே வன்னியது கவசந்தன்னிற்
பதிந்துமே சொக்கியது யிறந்துபோகும்
நாற்றவே சொக்கின்ற உப்புத்தன்னை
நாடியே கல்வமிட்டு எருக்கன்பாலால்
பேற்றவே வில்லைதட்டிக் காயவைத்துப்
போான யாகோபு பேசினாரே. (62)

பேசினார் ரவியுருக்கிப பத்துக்கொன்று
புகலரிய உப்பதனைக் கொடுத்துப்பாரு
வாசியாம் பொன்போலே ரவியுமாகும்
வாடிவரக் காயிதனை வெள்ளியெட்டில்
காசியா யிரண்டிட்டு ஊதிப்போடு
கருணைபெற மாத்தாறு கண்டுகொள்ளு
தோசியாய்த் திரியாதே உன்னைப்பாரு
தொல்லுலகில் ரசவாதந் தோயுந்தானே. (63)

தோயுமே விதைவிற்றுச் செலவுசெய்து
துடியாக முன்னுப்பை யுருக்கிப்பாரு
தாயுமே உருகியது பொன்னும்பாரு
தாட்டிகமாய் மணிபண்ணி மைந்துதன்னில்
காயுமே கயிறுகட்டிச் செபமேபண்ணு
கணக்காக உருச்செபிக்கக் கர்த்தர்தானும்
ஞாயமாய் வருவார்கள் வாதங்கேளு
நாட்டிலே சொல்லாதே நயந்துகேளே. (64)

நயமான உப்புமணி நாலுக்குத்தான்
நலமாக ஒன்றுகொடு தங்கந்தானே
பயந்துமே போகாதே தங்கம்நேரே
பாய்ச்சிவிடு நாகத்தைப் பரியுமாகும்
துயந்துபா ரிரவியதும் நூற்றுக்கொன்று
தூக்கிவிடு மாத்துமது பத்துமாகும்
வயந்துமே விற்றுவிதைச் செலவுசெய்ய
வழிபோடே யாகோபு சொன்னார்பாரே. (65)

சொன்னதொரு வங்கத்தைச் செந்தூரிக்கச்
சொற்பெரிய களங்கமது பலமும்பத்து
நன்னயமாய்க் கெந்தியது பலமும்ஒன்று
நாடறிய களங்கதுவும் பலமும்ஒன்று
கன்னயமாய் வெற்றிலையின் சாறினாலே
கணக்காகச் சேர்த்துமே கல்வமிட்டு
வன்னயமா யரைத்திடவே சாமம்ஒன்று
வகையாகக் குப்பிதனி லடைத்திடாயே. (66)

அடைத்துமே மேருகனி லேற்றிக்கேளு
அடைவாக எரிப்பதுபன் னிரண்டுசாமம்
நடைத்துமே எடுத்துப்பார் செந்தூரந்தான்
நலமான நவலோகந் தனில்செந்தூரம்
கடைத்துமே அணைத்திட்டுப் பார்க்கும்போது
கனகமது பத்தாகுங் கண்டுகொள்ளு
தடைத்துமே செந்தூரம் உள்ளேகொள்ள
தடையறவே யாகோபு சொன்னவாரே. (67)

சொன்னதொரு செந்தூரந் தேனிலுண்ண
சுகம்பெற்ற ஞானிக்குஞ் சாவோயில்லை
நன்னயமாய் மாந்தளிர்போல் மேனியாகும்
நலமாகத் தேகமது கல்த்தூணாகும்
இன்னிலத்தில் நோயெல்லாம் தவிடுபொடியாகும்
இருந்துரைக்க யாகோபு சொன்னதாலே
கன்னல்போல் காரியத்தைச் சொல்லிவிட்டேன்
கர்த்தாவி னருளினாற் கண்டுகொள்ளே. (68)

கண்டுகொள்ளு உப்பைமுந்திக் கட்டியாடு
கனகமது இருந்துவிடும் கணக்குமாகும்
வண்டுமே உப்பில்லாக் கட்டதெல்லாம்
மடைக்கட்டு கட்டாமோ வடிவுமில்லை
துண்டுமே மூலிகையா லுப்பைக்கட்டில்
தொல்லுலகில் ரசவாத மெல்லாங்கட்டும்
பண்டுமே பழங்கதைபோற் பேசினாக்கால்
பதிவில்லை யென்றுயா கோப்சொன்னாரே. (69)

பலமாகும் உப்பைமுந்தித் தெரிப்படக்கு
பதிவாகக் கட்டிநின்றால் பலனுமாகும்
பிலமாகுஞ் சூடமது சொக்கியாடும்
பின்புபார் வேதையது பிரட்டுமில்லை
கலனாக யிப்படியே கட்டாவிட்டால்
கழிப்பான செயமில்லை கண்டுபாரு
தலமாக ஒருருவாய் நின்றுகொண்டு
தாஷ்டிகமாய் யாகோபு தான்சொன்னாரே. (70)

தாளகச் செந்தூரம்.

சொன்னதொரு தாளகச்செந் தூரங்கேளு
சொற்பெரிய கைபாக வரிசையாக
நன்னயமாய் அப்பிரகம் பலந்தான்பத்து
நாட்டியதை நவநீதம் பண்ணிநீயும்
இன்னிலத்திற் கல்வமிட்டுப் பழச்சாற்றாலே
இருசாம மரைத்துவில்லை காயவைத்து
கன்னிகராய் புடம்போட்டு எடுத்துக்கல்வம்
கணக்காகப் பழச்சாற்றால் சாமமாட்டே. (71)

ஆட்டியே வில்லேதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் பெரியபுடம் போட்டுநீயும்
தாட்டிகமா யிப்படிக்குப் பத்துப்போட்டுத்
தாமெடுக்கச் செந்தூர மாகும்பாரு
காட்டியே கல்வமிட்டுப் பின்புகேளு
காரணமாய்த் தாளகமும பலமும்ஒன்று
வாட்டுமே ரசபதங்கம் பலமும்ஒன்று
வகையாக ரண்டுமே கல்வத்திட்டு
ஈட்டுமே ரசபதங்கந் தாளகத்தை
இதமாகக் கல்வமிட்டு வெண்கருவாலாட்டே. (72)

ஆட்டியே உண்டைபண்ணிக் கதிரில்வைத்து
அன்பாக முன்போட்ட அப்பிரகத்தை
நாட்டியே எருக்கம்பால் தன்னாலாட்டி
நலமாக முன்னுண்டை மேலேதானும்
வாட்டுமே கவசமிட்டு வலுவாகத்தான்
வடிவாகக் கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
வீட்டிமையா யதன்பின்பு செய்யுமார்க்கம்
வீரியமா யாகோபு விளம்பினாரே. (73)

வகையென்ன கல்லுப்புப் படியும்ஒன்று
வன்மையாய் மேனிச்சாறு தன்னாலாட்டி
துகையாகப் புடம்போட்டு எடுத்துநீயும்
துப்பரவா யிருசட்டி உரசிச்சேர்த்து
தகையாகச் சட்டிநடு உண்டைவைத்து
தடையறவே சுத்திலுமே மேனியுப்பை
பகையாக யிட்டுமே அமுழ்த்திப்பின்பு
பதிவாக மேற்சட்டி மூடிப்போடே. (74)

மூடியே சீலேமண் வலுவாய்ச்செய்து
முக்கியமா யடுப்பேற்றித் தீயைமூட்டி
வாடியே பன்னிரண்டு சாமத்தீயை
வகையாக எடுத்துப்பார் உயரயேறும்
காடியே வழுத்துயெடு கல்வத்திட்டுக்
கருணைபெற வெண்கருவா லரைத்துஉண்டை
பாடியே கதிரில்லைத்துப் பின்புகேளு
பரிவாக அடியில்நின்ற கவசந்தானே. (75)

கவசமதை நீக்கியே பொற்றலைபின்
கரிப்பான்றன் சாற்றினு லரைத்தெடுத்து
பவசமுடன் கவசமது செய்துபின்பு
பக்குவமாய்ப் பனிரெண்டு சாமந்தானும்
அவசியமாய்ப் போட்டெரித்துக் கவசம்நீக்கி
அன்புடனே பழச்சாற்று லரைத்து யும்
எவருக்குந் தெரியாமற் கவசஞ்செய்து
இனிமையுட னெரிக்கச்செந் தூரமாமே. (76)

பார்க்கவே செந்தூரம் பவளம்போலாம்
பரிவான செந்தூரந் தனையெடுத்து
ஏர்க்கவே ரவிநூற்றி லொன்றுதாக்க
இயலான செந்தூர மகிமையாலே
தாக்கவே தங்கமது பார்க்கொண்ணுது
தடையில்லா ஏமத்தை வித்துநீயும்
காக்கவே உண்டுடுத்தி யிருநீயென்று
கருணைபெற யாகோபு கருச்சொன்னேனே. (77)

கருத்தாகப் பணவிடைதான் தேனிலுண்ணக்
கனகநிறம் போலவே மேனியாகும்
உருத்தாகுந் தேகமது அலரிபோலாம்
உற்றதொரு நோயெல்லா மோடிப்போகும்
ஒருமையாய்ச் செந்தூரம் உண்ணமெத்த
உறுதியாய் வலுவாகுந் தேகந்தானும்
வருதியா யிருந்துவிடும் நாகந்தானும்
வரிசைபெற யாகோபு வழுத்தினரே. (78)

வரிசையாய்ப் பெண்தள்ளி மண்டலமேயுண்ண
வளமாக யிருநீயும் பரிதிமதியளவும்
கரிசையாய் வேதையது அதிகமாகும்
கருத்தாகக் கைபாக மறிந்துசெய்து
பரிசையா யாகோபு நபியுஞ்சொன்னேன்
பாரிலுள்ளோ ரிதையறிந்து செய்துகொண்டு
உருசையா யுண்டுடுத்தி யிருநீயென்று
உத்தமற்குச் சொன்னதிது உறுதிதானே. (79)

உறுதியாய் வாதத்தை உற்றுப்பாரு
உண்மையாய்க் கைபாக வரிசைகண்டு
கருதியதோர் மார்க்கமதாம் பலனுமாகும்
கணக்காக நம்பினற் பலனுமுண்டு
வருதியாய்ப் பாகத்தைக் கண்டுதேறி
வகையாகச் சரக்குமுதல் வரிசைகண்டு
பருதிமதி யுள்ளளவும் வாழலாகும்
பண்பரிந்து செய்துவிடச் சொன்னேன்பாரே. (80)

சொன்னதொரு எழுநூற்றில் வாதஞ்சொன்னேன்
சிறப்பாக இதிலேதான் திறந்துசொன்னேன்
நன்னயமாய் முன்னூரில் வரிசைபார்த்து
நாடியே செய்திட்டா லேமமாகும்
கன்னல்போ லிருக்கின்ற நூலைப்பார்த்து
கருத்துவைத்தாற் பலனகும் கண்டுதேரு
பின்னமில் லாமலுமே பிழைக்கச்சொன்னேன்
பிறட்டாகச் சொல்லவில்லை பிலனுமாமே. (81)

பிலனக யிந்நூலைப் பார்த்துத்தேறிப்
பிறட்டாகச் செய்யாமற் சரியாய்ச்செய்வாய்
அலனகத் தெரியாமற் பாகம்விட்டு
அலுத்துமே செய்துநீ யலையவேண்டாம்
கலனக நூல்பார்த்து வாதம்பார்த்துக்
காட்டும்வழி தெரிந்திடவே நூலைப்பாரு
சலனக மருந்துசுட்டு கெட்டுக்கெட்டு
சாஸ்திரங்கள் பொய்யென்றல் சவுங்கலாமே. (82)

சவுங்கலாய்த் திரியாமல் நூலைப்பாரு
தர்க்கமிட்டுத் திரியாதே வாய்பேசாதே
நவுங்கலாய் வாதமது கண்டாயானல்
நாட்டிலோர்க் குறையாதே மவுனங்கொள்வாய்
கவுங்கலாய் முரடனைச் சொன்னயாகில்
கடிந்துமே உயிரைத்தான் போக்குவார்கள்
தவுங்கலா யிருந்துமே செய்துபாரு
தாஷ்டீகமா ஞானிக்குச் சொன்னவாரே. (83)

சொன்னதொரு அறுநூறில் வாதம்பொய்யோ
சுருதிமுடிவான முந்நூறு பொய்யோ
நன்னயமா மெழுநூற்றில் வாதம்பொய்யோ
நலமான பஞ்சமித்ரம் களங்குபொய்யோ
தன்னகமாம் முந்நூர்செந் தூரம்பொய்யோ
சரியான வெண்ணூற்சூஸ் திரங்கள்பொய்யோ
கன்னல்போல் யாகோபு சொன்னநீதி
கணக்காகக் கைபாக வரிசைபாரே. (84)

வரிசையாய்ச் செந்தூரந் தன்னைப்பார்த்து
வகையாகக் கைபாக வரிசையாக
நரிசையாய்ச் செய்துமே தேரிப்பாரு
நலமான நபிமார்கள் பாதம்போற்றி
உரிசையாய் நூல்வர்மங் கண்டுதேரி
ஒழுங்காகப் பாகமதைத் தெரிந்துகொண்டால்
தரிசையாய் நீடூழி காலம்வாழ்வாய்
தாஷ்டீகமாய் யாகோபு தன்மைதானே. (85)

களங்குவகை.

தன்மையா யொருகளங்கு சொல்லுவேன்கேள்
தக்கதொரு நபிமார்க ளாடும்ஆட்டு
உண்மையாய் சருகைபித்தளை பலமும்பத்து
உறுதிபெறப் பந்துபோ லுருட்டிச்சுத்தி
வண்மையாய்ப் பெரியபுடம் போட்டெடுக்க
வளமான கரிபோலே தூளுமாகும்
புண்ணியமாய்க் கல்வத்தி லிட்டுநீயும்
பூரணமாய்க் கள்ளிப்பால் தன்னாலாட்டே. (86)

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாக அஞ்சுபுடம் போட்டெடுக்க
நீட்டியே நாகத்தின் வாடைநீங்கி
நிலவரமா யிருக்குமது யெடுத்துப்பாரு
வாட்டியே வண்டிலது கொஞ்சமிட்டு
வகையாகக் குகையிலிட்டு உரக்கஊது
நாட்டியே செவ்வலரி போலேசெம்பு
நலமாக உருகுமது நாட்டங்கேளே. (87)

நாட்டமென்ன சொல்லுகிறேன் தகடுதட்டி
நலமான கெந்தியைத்தான் அன்னத்தாலே
மூட்டவே அரைத்துயிடை செம்பிற்கட்டி
மூவுலக மெய்க்கவே நொருங்கமீட்டும்
காட்டியே புடமிட்டு எடுத்துப்பாரு
கரிபோலே தூளாகுங் கல்வமிட்டு
மாட்டவே பாதியிடு மிருதார்சிங்கி
மதிபெருக்கக் கல்வமிட்டு சாமம்நாலே. (88)

சாமந்தான் நாலாக அன்னத்தாலே
சரியாக அரைத்துவில்லை கதிரில்வைத்து
நாமந்தான் புடமிட்டு எடுத்துப்பாரு
நலமான நிறமதுவு முருக்கம்பூப்போல்
வாமந்தா னிப்படிக்கு அஞ்சுயிட்டால்
வகையான செம்பதுதா னிறந்துபோகும்
தாமந்தா னுருக்குவெள்ளி தானுருக்கித்
தடையறவே செந்தூரம் ரெண்டுதாக்கே. (89)

சொன்னதொரு நாகத்தின் செந்தூரத்தைச்
சொற்பெரிய தங்கத்தைக் குகையிலிட்டு
தன்மையா யுருக்கிமுன்னஞ் செந்தூரத்தைத்
தாட்டியா யிடைக்கிடையாய்ச் சேர்த்துப்பாரு
பின்னமது வில்லாமல் வாங்கிக்கொள்ளும்
பெருகவே தகடடித்துப் பின்புகேளு
கன்னல்போல் தகட்டுக்கு முக்கால்கெந்தி
காரணமாம் வீரங்கால் கனிவாய்வாங்கே. (90)

வாங்கியே கல்வமிட்டு அன்னத்தாலே
வகையாக அரைத்துநீ வழித்துநீயும்
பாங்கியே தகட்டின்மேற் கவசங்கட்டிப்
பத்தியாய் நொருங்குமட்டும் புடத்தைப்போடு
தாங்கியே பார்த்தாக்கால் கரித்தூளாகும்
தடையறவே யெடுத்துருக்க நாலிலொன்று
ஏங்கியே போகாதே தாரந்தன்னை
இதமாக ஆட்டுநீ அன்னத்தாலே. (91)

ஆட்டியே புடம்போடு சிவந்துபோகும்
அருணநிறஞ் செவ்வரளிப் பூப்போற்றானும்
நாட்டிலே சொல்லாதே யிந்தப்போக்கை
நபிமார்கள் செய்ததிந்த வேதைமார்க்கம்
காட்டியே வெள்ளிவெட்டில் ரெண்டுதாக்கு
கனமான தங்கமாங் கருதிப்பாரு
தேட்டிலே வாதமெலாம் நொடிக்குளாகும்
திடமான யாகோபு சொன்னவாரே. (92)

சொன்னதொரு பணவிடைதான் தேனிலுண்ண
சொற்கதிர்போல் மேனியுமாஞ் சாவோயில்லை
நன்னயமாய் நோயெல்லாந் தவிடுபொடியாகும்
நாதாந்த நபிமார்க ளாடும்ஆட்டு
பின்னமில்லா விந்ததுவும் நன்றாகத்தான்
பெலமாக யிருக்குமது பலனாகத்தான்
கன்னல்போல் மேனியுமாங் காயசித்தி
கனிவாக யாகோபு கருதினாரே. (93)

கருதியே எழுநூற்றில் பாகமெல்லாம்
காட்டவில்லை காட்டவில்லை யென்றுசொல்லி
வருதியாய் மூந்நூறு செந்தூரத்தில்
வழிகாட்டி யின்னூலில் திறந்துவிட்டேன்
பருதியாய் நூற்றியைம் பதிலேசொன்னேன்
பதிவாக என்னூலை முற்றும்பார்த்தால்
உருதியாய்த் தோணுமது வெல்லாமாகும்
உண்மைவா கோப்புரைத்தார் குணமாய்த்தானே (94)

குணமான நொருக்குவெள்ளி முன்னேசொன்னேன்
குற்றமறக் கெந்திவழி சேர்ந்தபோது
வனமாகச் சிதறுமது சுடரைச்சேர்த்து
வகையாக அரைத்துபுடம் போட்டெடுத்து
தனமான தாளகத்தை நாலிலொன்று
தாட்டிகமாய்ச் சேர்த்தரைத்துப் புடமுமிட்டால்
கனமான வெள்ளிசெந் தூரமார்க்கம்
காரணமாய்க் கரியில்வைத் துருக்கிடாயே. (95)

உருக்கியே சாய்த்துப்பார் வெள்ளிதானும்
 உறுதியா யெடுத்தபின்பு சொல்லக்கேளு
பருகிடவே எழுநூற்றில் சொன்னேன்செம்பு
 பதிவாக எட்டுரெண்டு சேர்த்துக்கொள்ளு
உருக்கிடவே ஏமம்ரெண்டு சேர்த்துக்கொள்ளு
 உறுதியாய் உருக்கிப்பார் மாத்துயெட்டு
முருக்கிடவே விற்றுநீ செலவுபண்ணி
 மூவுலகு மெச்சும்நீபண்ணித்தேரே. (96)

பண்ணியே செந்தூரஞ் செய்துநீயும்
 பதிவாக நவலோகம் பழுக்கப்பண்ணி
நண்ணவே காயசித்தி பண்ணிப்பின்பு
 நலமாகப் பின்புநீ நாட்டம்பாரு
உண்ணியே ஒருவருடன் பேசாமற்றான்
 ஒழுங்காக நபிமாரைத் தொழுதுபோற்றி
துண்ணியே அல்லாவைத் துதித்துநீயும்
 துணையாகப் பக்திபால் தோய்ந்துநில்லே. (97)

தோய்ந்துநீ யுலகத்தில் வேதைமார்க்கம்
 சொல்லாதே நிழலைப்போல் காத்திருந்த
வாய்ந்திசைந்த வாதிக்கு உபதேசித்து
 வகையாகச் சொல்லியே யிருந்துநீயும்
ஆய்ந்துமே காயசித்தி யிருந்துபண்ணிக்
 அன்போடே இராஜாவின் ஆக்கினைக்கு
பாய்ந்துமே அடங்கிநீ யிருந்துகொண்டு
 பதிவாக யாகோபு சொன்னார்பாரே. (98)

சொன்னதொரு நூலினுட வர்மங்கண்டு
 சொற்பெரிய கைபாக வரிசைபாரு
நன்னயமாய் நீகண்டு எடுத்துக்கொண்டால்
 நலமான ராசயோக கத்தின்வாழ்வு
இன்னிலத்தி லிருக்கமட்டும் உண்டுதேரு
 இதமாக நூலில்லா வாதம்பார்ந்தால்
சொன்னமய மாகாது தோய்ந்துபாரு
 தொல்லுலகில் யாகோபு சொன்னதாமே. (99)

தானென்ற இந்நூலில் வாதம்பார்த்தால்
தாஷ்டிகமாய் யாகோபு சொன்னநீதி
வானென்ற வையகத்து வாதிமார்கள்
வகையாகக் கண்டுதான் பிடிப்பாரப்பா
கானென்ற கர்த்தாவைத் துதித்துநீயும்
கைமுறையை யறிந்துநீ கண்டுகொள்ளு
நானென்ற கைபாக வரிசைதப்பில்
நலமில்லை யென்றுசொன்னார் யாகோப்தானே. (100)

சொன்னதொரு எழுநூற்றில் சத்துமார்க்கம்
சூட்சமாய்ச் செம்படுக்கச் சொன்னேன்பாரு
கன்னயம தாகவேயிந் நூலிற்றான்
நலமாகப் பாகமெல்லாஞ் சொல்லிவிட்டேன்
கன்னல்போற் றுருசுடனே கெந்திசேர்த்துக்
கரும்பாக உருக்கிடவே செம்புமாகும்
இன்னிலத்திற் கொடியோனைச் சேருபின்பு
இதமாகத் தாளகத்தைச் சேருபின்பே. (101)

சேர்க்கவே கெந்தியம் தாரசயம்
கெட்டியாய்ச் சிவந்துமே யிருக்கும்பாரு
பார்க்கவே செம்புதான் சிவந்துநிற்கும்
பதிவான வெட்டிரெண்டு அயத்தைச்சேர்த்து
ஏர்க்கவே அதையரைத்துப் புடமுமிட்டால்
இதமாக உருக்கிடவே செம்புமாகும்
கார்க்கவே கல்மசங்க ளகன்றுநிற்கும்
கனகமய மாகுமென்று கண்டுகொள்ளே. (102)

கண்டுநீ பாகத்தைக் கைவிடாமற்
காரணமாய் ரசவாதங் கண்டுகொள்ளு
தொண்டுபெறும் தொல்லுலகிற் சொல்லிடாதே
துடிபாகச் சொன்னக்கால் தலையும்போகும்
பண்டுபடும் எளியவர்போல் பதமாய்நில்லு
பாரித்தா லுனதுவுயிர் நிலையாதப்பா
வண்டுபோல் பகர்ந்திடுவீ ரென்றுதானும்
வண்மையா யாகோபு வசனித்தாரே. (103)

களங்கு.

வசனித்த எழுநூற்றில் சொன்னவாதம்
வகையாகச் சுருக்கத்தில் சொன்னேனப்பா
தசனித்துப் போகாமல் துருசுதன்னைச்
சாங்கமாய்ப் பலம்பத்து நிருத்துக்கொண்டு
உசனித்த நாற்றமது துருசுரெட்டி
உத்தமமாம் வீரமது காலும்போட்டு
நசனித்த பழச்சாற்றில் நாலுசாமம்
நலமாக அரைத்துமெள்ள வில்லைமாட்டே. (104)

மாட்டியே கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு
வகையாக அதன்பேரிற் கவசங்கேளு
தாட்டியே கல்லுப்புச் சுண்ணம்நேராய்
தனையரைத்து வில்லைக்குக் கவசங்கட்டி
தாட்டிகமாய்ப் புடமிட்டு எடுத்துப்பார்க்க
தன்மையாய் யாகோபு சொன்னநீதி
மூட்டியே கரிபோலத் தூளுமாகும்
முடியநீ யரைத்திடவே முறையைக்கேளே. (105)

முறையாகச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
முதலான கெந்தியது செம்பினோடே
வறையாகச் சேர்ந்துதென்றால் கறுத்துப்போகும்
வண்மையாய் சிவக்கநீ விபரங்கேளு
நறையாத தாரமது பாதிசேர்த்து
நலமான அன்னத்தி னீராலாட்டு
கரையாக அரைத்துவில்லை கதிரில்வைத்துக்
கடிதாகப் புடம்போடச் செந்தூரமாமே. (106)

செந்தூர மாச்சுதென்று மயங்கவேண்டாம்
செப்பமாய்ச் சுடர்க்கொடியோன் தன்னைச்சேர்த்து
பந்தூரம் அரைத்துவில்லை காயவைத்துப்
பதிவாகப் புடம்போடக் கசடுநீங்கும்
வெந்தூரம் எலுமிச்சம் பழத்தின்சாற்றில்
விதியாக ஊரவைத்துப் பொடியைத்தானும்
கந்தூரச் சிந்தூரம் எட்டிலொன்று
கனிவாகச் சேர்த்துநீ யரைத்திடாயே. (107)

அரைத்துநீ பழச்சாற்றில் மைபோற்றனே
அடைவாக வில்லைதட்டி ரவியில்வைத்து
திரைத்துமே புடம்போட்ட வில்லைதன்னைத்
திண்ணமாய்க் கொட்டைப்பாக் களவுதானும்
துரைத்துமே கரியில்வைத்து உருக்கிப்பாரு
துரிதமாய்ச் சூரியன்போ லுதயமானல்
பரைத்துமே உருக்கியதை வெள்ளிதன்னில்
பதிவாகக் கொடுத்திடவே பழுக்கும்பாரே. (108)

பழுக்கவே உருக்குமுகம் பாய்ச்சிறுக்கால்
பதிவான வெங்காரஞ் சமனுய்ச்சேர்த்து
உழுக்குமே முன்சாற்றி லரைத்துநீயும்
உற்றுமே போட்டிடவே கருத்துப்போகும்
வழுக்குமே உருக்கியதை ஊதிப்போடு
வகையாகப் பொன்போலே கண்விட்டாடும்
இழுக்குமே வாராது வெள்ளிதன்னில்
இதமாக யெடுத்திடயா கோப்சொன்னரே. (109)

சொன்னதொரு செம்பதனை யெடுத்துக்கொண்டு
துடியான வெள்ளியது எட்டில்ரெண்டு
நன்னயமாய்க் கொடுத்தாதித் தங்கம்ரெண்டு
நலமாகச் சேர்த்திடவே மாத்துஏழு
கன்னல்போ லாகுமடா நபிமார்சொன்னர்
கருணைவைத்து உலகத்தில் வாதிக்காக
இன்னிலத்திற் சொல்லிவிட்டேன் புத்திவாதம்
இசைந்தவர்க்கு ஆகுமடா உறுதிதானே. (110)

உறுதிதான் யேதென்றல் சொல்லக்கேளு
உற்றுநின்ற எழுநூற்றிற் சொன்னசெம்பு
அறுதியாய்ச் சொல்லிவிட்டே னதிலுமாகும்
அடைவாக யிந்தநூற் றைம்பதுக்குள்
மருதியாய்ச் செம்பெடுத்தா லெல்லாமாகும்
மனமறிந்து சுட்டாக்கால் வாதமாகும்
கருதியாய்ச் சுடாவிட்டால் தெரியாதப்பா
காரணமா யாகோபு நலஞ்சொன்னரே. (111)

சொன்னதொரு துருசுடனே கெந்திசேர்த்துக்
துணையில்லை சக்தியில்லை துரிதமில்லை
உன்னதமா யதுசிவந்தால் சூடம்நேராம்
உரவாக்க செம்புவந்து திறக்கமேலாம்
இன்னிலத்தி லிந்நூல்போ லெந்நூலுமில்லை
இதமாகத் தோன்றுமிதில் சாரமெல்லாம்
கன்னல்போல் யாவுமே சேர்ந்தாலன்றோ
கனிவாக வெள்ளியெல்லாம் பழுக்கும்பாரே. (112)

பழுத்துமே வெள்ளியது நிற்கும்போது
பதிவான தங்கமது சேராவிட்டால்
முழுத்துமே பழுக்காது சேர்த்துத்தங்கம்
முனையாகும் வித்துமே செலவுசெய்வாய்
இழுத்துமிப் படிச்செய்தும் மட்டம்ஆகில்
இசைவாகத் தப்பிற்று பழுக்காதப்பா
முழுத்தேங்காய் நாயுருட்டும் வாறுபோல
மூலத்தைக் கண்டாக்கால் எல்லாமாமே. (113)

மூலத்தைக் கண்டோர்கள் மக்காநாட்டில்
முனிவாக நபிமார்கள் மெத்தவுண்டு
சீலத்தைக் கண்டுமே வாதஞ்செய்து
சிறியோரா யிருந்துமே பெரியோராகி
காலத்தைப் போக்கியே நபிமாரானார்
கருத்தாக நீயிருந்து நாட்டிலேவீண்
காலத்தைக் கழியாதே யென்றுதானுங்
கருத்துடனே தாட்டிகன்யா கோப்சொன்னாரே (114)

சொன்னதொரு நூல்தனிலே மர்மங்கண்டு
சொர்பெரிய பெரியோர்கள் நுணுக்கம்கண்டு
நன்னயமாய்க் களங்குகளின் வரிசைகண்டு
நாடியதோர் செம்பெடுக்கு முறைகள்கண்டு
இந்நிலத்தில் மதிதனிலே கொடுக்கும்நேர்மை
இதமான தங்கத்தைச் சேர்க்குநேர்மை
கன்னல்போ லூதியே யெடுக்கும்பாகங்
கண்டாக்கால் வாதியென்று கருதலாமே. (115)

கருதியே சத்துடைய மர்மங்கண்டு
கனமாகச் சுடர்க்கொடியோன் தன்னைப்பார்த்து
வருதியே தாளகத்தின் நேர்மைகண்டு
வளமான துகையறிந்து அயத்தகட்டை
உருதிபெற புடத்தினுட மார்க்கங்கண்டு
உளவாகச் சேர்த்திட்டு ஊதிப்பார்த்தால்
கருதியே செய்தபடி யெல்லாமாகும்
கர்த்தர்யா கோபுசொன்னார் நலமாய்த்தானே (116)

நலமான களங்குசத் துருவுங்கண்டு
நாடியே பூத்துவரும் நேர்மைபார்த்து
பலமாகச் சேர்த்தரைத்துப் புடத்தைப்போட்டு
பதியறவே உருக்கியெடு செம்பேயாகும்
வளமான செம்பதுவை மதியதெட்டில்
வடிவாக யிரண்டுசேர் தங்கம்ரெண்டு
பிலமாகச் சேர்த்துருக்கப் பொன்னுமாகும்
பிசகாது புடத்துக்கு யிரங்கும்பாரே. (117)

இரங்கவே செம்பதுவுங் கருப்பேயானால்
இசைவாக வெங்காரம் பாதிசேர்த்து
வரங்கவே சேர்த்தரைத்துப் புடமொன்றிட்டால்
வகையாக அயக்கசடு மாறிப்போகும்
குரங்குபோ லலையாமல் நூலைப்பாரு
குறிப்புவைத்துச் சோதித்தாற் பலனுமாகும்
களங்குசா திக்கவகை யில்லாட்டால்
கடிதான பலனில்லை கண்டுபாரே. (118)

சத்து வகை.

கண்டுபார் சத்துக்கள் சொல்லக்கேளு
கனிவான சுடர்க்கொடியோ னில்லாவிட்டால்
தொண்டுபார் கெந்தியுட யீயக்தானும்
சுகமாகப் பிரியாது பயனேயில்லை
பண்டுதான் தாளகஞ்சே ராமற்போனால்
பதிவான கெந்தியம் பிரிந்திடாது
உண்டுபார் உன்னுடலை மேலேயேத்தும்
உற்றுப்பார் யாகோபு உறுதியாமே; (119)

உறுதியாய்க் களங்கோடு செந்தூரங்கள்
உண்மையாய் யிந்நூலிற் சொன்னற்போல
மறுதியாய்ப் பார்த்திட்டால் தங்கமாகும்
மகத்தான நபிமார்கள் ஆடுமாட்டு
சுருதியாய்க் கைபாக வரிசைதப்பில்
சத்துமே பலனுமில்லை சித்தியில்லை
தருதியாய்த் திரியாதே யென்றுசொன்னர்
தாஷ்டிகவான் யாகோபு தன்மைதானே. (120)

தன்மையாய் மூந்நூறு எழுநூறிற்முன்
தாட்டிகமாய்ச் சொன்னதென்ன தன்மையாக
நன்மையாய்ச் சுருக்கத்தை உற்றுப்பார்த்து
நலமாக யிரண்டுமூந்நூற் தன்னைப்பார்த்து
உண்மையாய்ப் புடமிட்டால் தெரியுமப்பா
ஊக்கமுடன் செய்கையிலே தப்பிற்ருனல்
வண்மையாய் மூன்றுமுறை வைத்துப்பாரு
வடிவான குருவாகும் வளமைபாரே. (121)

பாரேநீ மக்காவின் தேசந்தன்னில்
பாங்கான மனிதர்சிலர் வாதஞ்செய்து
காரேநீ நபிமாரைப் போலிருப்பார்
கடிதான தென்பக்கம் கீழ்பக்கத்தோர்
நாரேநீ நூல்போற்கை பாகங்கண்டு
நலமாக நம்பியே செய்யமாட்டார்
ஆரேநீ அவனவன்றன் மனம்போர் சுட்டு
அலைவார்கள் தேசத்தோர் வழக்கந்தானே. (122)

வழக்கமாய்த் திரிவார்கள் வாதங்காணுர்
மயங்கியே வாதம்பொய் யென்பார்மூடர்
நளக்கமாய் மக்காவின் தேசந்தன்னில்
நலமான பெரியோர்கள் பிறந்தசீமை
களக்கமாய் கர்த்தாவைப் போலிருந்து
கண்டுகொண்டார் வாதமதின் நேர்மையெல்லாம்
பழக்கமா யிருக்குமந்தத் தேசந்தன்னில்
பதிவாக விருத்தியா யிருப்பார்தானே. (123

விருத்தியா மின்னமொரு களங்குகேளு
வேதாந்த நபிமார்களாடு மாட்டு
கருத்தியா மக்காவின் தேசந்தன்னில்
காரமாய்ச் சட்டியிலே உண்டுதானும்
விருத்தியா யிருந்துசாப் பிட்டுவந்த
விதமான ஒட்டைமிக உடைத்தெடுத்து
வருத்தியாய்ப் பூநீரில் பிச்சுப்போட
வளமாகத் தெளியுமது நாட்டங்கேளே. (124)

நாட்டமாய்க் கெந்தியது பலமும்பத்து
நலமாகத் தெளிந்தநீர் தன்னைவிட்டு
வாட்டமாய்க் கருங்காலிக் கட்டையாலே
வசமாக அயக்கரண்டி தன்னிலிட்டு
காட்டமா யெரித்திடவே மெழுகுமாகும்
கனமான மெழுகுதனைப் பதனம்பண்ணி
நீட்டமாய்ச் செம்பென்ற தகட்டிற்பூசி
நிலையாகப் புடம்போடத் தங்கமாகும். (125)

தங்கமாம் லோகமெல்லாந் தடவிப்போட
தன்மைபெற்ற தங்கமாம் நல்லவித்தை
எங்கள்குல நபிமார்கள் செய்வார்பாரு
இதமாக நான்கண்டு உலகோருக்கு
உங்களுக்காய்ச் சொல்லிவைத்தே னிரக்கமாகி
உண்மையாய் மெழுகதனை ஒட்டகப்பாலில்
சங்கமா யிருக்கவென்றால் மண்டலந்தான்
சாப்பிடவே காயசித்தி வலுக்கும்பாரே. (126)

வலுதியாய்த் தேகமது செவ்வலரிபோலாம்
வகையான உன்சடலங் கற்றாணுகும்
சலுதியாய் மெழுகதனை உண்டுபாரு
சதியான நோயொன்று மில்லையில்லை
உறுதியா யுன்வயது நூறுமட்டும்
உண்மையாய்த் தேகமது கஸ்தூரிவீசும்
தறுதியாய் நரம்பதுவு முருக்குமேறும்
தானறிந்து யாகோபு கருச்சொன்னேனே (127)

கருவென்ன சொல்லுகிறேன் உனக்குமேகேள்
கவலையது கெந்தியினில் துருசைக்கொல்ல
உருவென்ன சத்தாகும் உடைத்துப்பாரு
உணர்வாக வெங்கலம்போ லுறுதியாகும்
செருவாகும் வெங்கலம்போல் சததாய்நின்ற
செம்பெடுக்க வகையொன்று சொல்லக்கேளு
தருவாக வாழ்மடந்தை சத்திற்பாதி
சரிசேரு அரைத்துகனல் மீதில்வாட்டே. (128)

ஆட்டியே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போடச் சிவக்கும்பாரு
கூட்டியே சிவந்தபின்பு மடையன்தன்னைக்
குணமாகப் பாதிதான் கூடச்சேர்த்து
வாட்டியே அரைத்துவில்லை முன்போல்வாட்டி
வடிவாக வில்லையைத்தான் கதிரில்வைத்து
காட்டியே புடம்போடக் கெந்திபோய்
கலமான சத்துமே நலமதாமே. (129)

நலமாகக் கொடிபோனைச் சேர்த்துப்பின்பு
நாடியே அரைபொடியைப் பழச்சாற்றன்னில்
சலமாக மூன்றுநா ளூறவிட்டு
சரியாகப் புடம்போட்டுச் சத்திற்சேர்த்து
கலமாக அரைத்துரவி காயவைத்து
கடிதாகப் புடம்போட்டு எடுத்தாயானால்
தலமாகக் கறுப்பாகும் கறுப்பினோடே
தடையறவே வண்டிலது பாதிசேரே. (130)

பாதிநீ சேர்த்துமே முன்னீராலே
பதிவாக அரைத்துவில்லை காயவைத்து
நீதியாய்ப் புடம்போட்டுக் குகையிலிட்டு
நினைவாக உருக்கியே பார்க்கும்போது
வாதிகாள் சரியான செம்புமாகும்
வடிவான செம்புதனை மதியதெட்டில்
காதியாய் ஒன்றுகொடு வேதைகாணும்
கருணைபெற யாகோபு கருச்சொன்னேனே. (131)

கருத்தாகத் தங்கம்ரெண்டு சேர்த்துப்பாரு
கருணைபெற மாத்தேழு காணுமப்பா
உருத்தாக யிதைவித்துச் செலவுசெய்து
உண்மையுள்ள நபிமார்கள் போலிருந்து
பெருத்ததொரு பூவுலகில் வெளியோர்போலப்
பேசாம லிருந்துமே செம்பைச்செய்து
வருத்தமில்லா திருக்கயா கோபுசொன்னர்
வண்மையிர்தச் செம்புதனை நாடிப்பாரே. (132)

சிங்கிமுறை.

நாடிப்பார் மிருதாரு சிங்கிதன்னை
நபிமார்கள் ஒளித்திட்ட நட்பைக்கேளு
கூடிப்பார் சிங்கியது பலமும்பத்து
கூசாமல் வெடியுப்பு ஐந்தாககாய்ச்சல்
வாடிப்பார் யிரண்டிடைதான் கூட்டிநீயும்
வளமாக அன்னமென்ற பாலாலாட்டி
தாடிப்பார் புடமைந்து போட்டுக்கொண்டு
தடையறவே கல்வமதிற் போட்டுக்கேளே. (133)

போடவே தாளகமும் ரசமும்நேரே
போகமாய் நாலிலொன்று இட்டுநீயும்
நீடவே அன்னமென்ற பாலாலாட்டி
நிதியாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாடவே புடம்போடப் பவளமாகும்
நலமாஞ்செந் தூரம்ரவி நூற்றிற்ருக்க
பாடவேகொடுத்திடவே மாத்துப்பத்தாம்
பதமாகப் பணவிடைதா னுண்ணக்கேளே. (134)

உண்ணவே மணடலத்திற் காயசித்தி
உறுதியாய்க் காயமது செவ்வலரிபோலாம்
நண்ணவே காயமது பெலத்துப்போகும்
நலமாகச் சாவில்லை வயதோமெத்த
துண்ணவே சந்திரன்போற் காந்தியாகும்
துடியாக நரம்புகளு முருக்குமேறும்
கண்ணவே தேகமது பவளமாகும்
கருணையுடன் யாகோபு கருச்சொன்னேனே. (135)

கருணையொ டெழுநூற்றிற் சொன்னமார்க்கம்
கடைசிதனி லிந்நூலைக் கருதிச்சொன்னேன்
வருணையா யெல்லோரு மெந்தன் நூலை
வகையாகப் பார்த்துமே கருத்துணர்ந்து
தருவான கருவையெல்லா மனதிலெண்ணித்
தாட்டிகமாய்ப் பாகமுடன் செய்துகொண்டு
உருவாக நீடூழி காலம்வாழ்ந்து
உற்றசிவம் போலிருந்து வாழ்வார்தானே. (136)

இருந்துமே வெள்ளிவித்தை முன்னேசெய்து
இதமாகப் பின்புதான் சத்துமார்க்கம்
வருந்தியே நீகண்டு உப்பைச்செய்து
வடிவான கைபாக வரிசையாக
அறிந்துமே செய்துபின் செந்தூரத்தை
ஆட்டியே வைத்துமே நாடிக்கேளு
பறிந்துமே திரியாதே நூலைப்பாரு
பதிவான யாகோபு பலன்சொன்னாரே. (137)

சொன்னதொரு நூலில்லா வாதம்பார்த்தால்
சொற்பெரிய நரகத்தில் வீழ்ந்துமாள்வார்
நன்னயமா யொருவருட பேச்சைக்கேட்டு
நலமாகச் சுட்டாக்கால் கெட்டுப்போவாய்
இந்நிலத்திற் சாஸ்திரங்கள் பொய்தானென்றால்
இனிதாக நரகமது எய்துமப்பா
கன்னல்போ லிந்நூலை யெல்லாம்பார்த்துக்
கருத்தாகச் சுட்டாக்கால் யெல்லாமாமே. (138)

வாதமா மயச்சத்து முன்னேபார்த்து
வகையாகச் செம்பெடுத்து வெள்ளிதன்னில்
ஆதமாய்ச் சேர்த்தூதத் தங்கமாகும்
துணையாகச் செலவுக்கு வைத்துக்கொண்டு
ஊதமாய்குலந் தழைக்கச் சோறுபோடு
ஒருவருக்குஞ் சொல்லாதே உண்மைசொன்னேன்
வாதமதுசெய்து செம்பொன் தேடிக்கொண்டு
மங்களமாயிருந்து நல்லமதியைக்காணே (139)

காணவே இன்னமொரு களங்குகேளு
கனிவான செம்பால்கீழ் மூடிபண்ணி
தோணவே அயத்தாலே மேல்மூடிபண்ணி
சுகமான நாகமது பலமுமெட்டு
வாணவே உருக்குமுகந் தன்னிற்றானும்
வளமான சூதமஞ்சு தொந்தித்தேதான்
தாணவே கெந்திபது பலமுமஞ்சு
தடையறவே மூன்றுபலந் தாளகமும்நன்றே (140)

நன்றாக வீரமது பலமும்ரெண்டு
நலமாகக கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி
நன்றாக அயச்செம்புக் குள்ளேபோட்டு
கருவாக மூடியே சீலைசெய்து
வன்றாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
வண்மையுள்ள மேல்மூடி வெட்டையாகும்
தொன்றாக் கண்டதுபோல் குகையிலிட்டுத்
துணிவாக உருக்கையிலே சத்துமாமே. (141)

சத்தான சத்துக்குள் காரமிட்டுத்
தடையறவே யுருக்கியதைச் சாய்த்துப்பாரு
முத்துகளுமுடைந் தாப்போற் சத்துமாகும்
முனிந்துமே சத்திடைக்குக் காரஞ்சேர்த்து
சித்தான கல்வமதி லிட்டரைத்து
திடமான அன்னத்தால் சாமம்நாலு
நத்தாக அரைத்துவில்லை காயவைத்து
நலமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
பத்தாகச் சிவந்ததுவுஞ் சத்துமாகும்
பதமாக யெடுத்துமே பாகங்கேளே. (142)

பாகங்கேள் யெடுத்துமே கொடிபோன்தன்னைப்
பதிவாக அன்னத்தா லாட்டிக்கொண்டு
தாகமாய் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
சரிந்தபுடம் போடச்செந் தூரமாகும்
நாகமாய்ச் செந்தூரந் தனையெடுத்து
நபிமார்கள் சொன்னபடி நாட்டம்பார்த்து
யூகமாய் வெள்ளியெட்டில் ரெண்டுசேர்த்து
உறுதிபெறத் தங்கமது ரெண்டுசேரே, (143)

சேர்த்துமே ஊதிப்பார் செம்பொன்னாகும்
சிறப்பாகச் செம்பொன்னை வித்துநீயும்
காத்துமே உண்டுடுத்திக் கந்திரிகள்செய்து
கடிதான ஞானயோ கத்தைப்பாரு
நார்த்துமே ஆண்டவனைத் தியானஞ்செய்து
நலமான நபிமார்கள் பாதம்போற்றி
பார்த்துமே யிருவென்று யாகோப்சொன்னார்
பதம்பெற்ற போதகரைப் பணிந்துபோற்றே. (144)

பணிந்துமே சாஸ்திரமுஞ் சூஸ்திரமும்பாரு
பரிபாஷை நாமமது வெளுத்துப்போகும்
கணிந்துமே நூலினுட மர்மங்கண்டு
கருத்துவைத்து நூலதனைக் கண்டுபார்த்து
தனிந்துமே தம்பிரான் தன்னைத்தானும்
தாட்டிகமாய்த் துதிசெய்து கருத்தில்உண்ணி
வனிந்துமே சரக்கெல்லாம் ஊணிப்பாரு
வகையாகக் குருவாகும் வணங்கிப்பாரே (145)

வழங்கவே யென்பேரு ராமதேவன்
வகையாகப் பெருநூல்கள் பாடினேன்பார்
தழங்கவே மறைவாக மறைத்துப்போட்டேன்
தாட்டிகமாய் மக்காவின் தேசமேகி
துளங்கவே மகமதுவின் மார்க்கந்தன்னில்
சுகமாகக்கூடியே சுருக்கமெல்லாம்
விளங்கவே சொல்லிவிட்டேன் சத்துமார்க்கம்
விதமான செம்பெடுக்க வழிசொன்னேனே. (146)

சொன்னதொரு செந்தூரம் தைலமோடு
துடியான செம்புவகை துடியாய்ப்பாடி
நன்னயமாய்க் கைபாக வரிசைபாடி
நலமாக நபிமார்கள் பிழைக்கவேண்டி
பின்னமது மில்லாமல் உலகத்தோர்க்கு
பிணக்கறவே ரசவாதம் பார்த்துத்தேறி
கன்னல்போற் சொல்லிவிட்டேன் நூலைப்பாரு
கருத்தோடே நூற்கோர்வை பிலனுய்ப்பாரே (147)

பிலனாக முன்னிருந்த நிலமைகண்டு
பெரிதான மக்காவின் தேசம்புக்கி
வலமாக நபிமாரை நாமுங்கண்டு
வசமாக வென்னையவர் சேர்த்துக்கொண்டு
நலமாக நபிமார்கள் சொல்லச்சொன்னார்
நாட்டிலுள்ளோர் பிழைக்கவே நானுஞ்சொன்ன
தலமாகச் செந்தூரம் பாடச்சொன்னார்
தாட்டிகமா யிதைப்பின்பு பாடினேனே (148)

பின்புதான் மலைதேசம் புக்கிப்பின்பு
பிரபலமாய் வகாரமது பின்புபாட
அன்பாக எல்லோரு மென்னைவேண்டி
அடைவாக வெடுத்துரைத்தார் கர்த்தாவென்று
தென்புடனே சத்துடைய மார்க்சுங்கண்டு
செல்வமாய்ச் சொல்லிவிட்டே னதிகநன்மை
சுன்னமாய் முன்னூறும் பின்னேபாடிச்
சூட்சமாய் வெல்லோருங் கண்டார்பாரே (149)

கண்டுபா ரின்னூலைப் பொருக்கியானும்
கனமாக நூற்றியம் பதுவும்பாடி
தொண்டுபட்டு முப்புமுதற் சொன்னேன்பாரு
தொல்லுலகில் ரசவாதிக் காகச்சொன்னேன்
பண்டான சாஸ்திரமும் பார்த்துத்தேறி
பதிவாக உலகத்தோர் பிழைக்கவேண்டி
தொண்டுபட யிந்நூல் நூற்றைம்பதாகத்
துணையாக வெல்லாமுஞ் சித்தியாமே. (150)

யாகோபு வைத்திய சூஸ்திரம் 150.
முற்றிற்று.

அறிவிப்பு.

இந்நூல் முதற்பதிப்பு அச்சிட்டு முடிந்தபின்பு சுப்பிரமணிய சிவா அவர்கள் இதேபிரதி ஏடுகொடுத்தார். பின்பு அந்தஏட்டை வைத்து இந்த நூல் அச்சிடலானது.

கடவுள் துணை

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

செந்தூரம் ஈருய-க்கு

எடைபர்கஞ் சொல்லக்கூடிய

சூஸ்திரம்-ருயரு.

நித்தியமாய் நிரைந்தகுரு நபிமார்பாதம்
நீணிலத்திற் ருன்பணிந்து துதியேசெய்து
பத்தியுடன் னூற்றியன்பது வுந்தானும்
பாருலகிற் பாடியே யதைச்சுருக்கி
புத்தியுட னன்பதாய்ப் பாடினேன்பார்
புகலரிய சத்துகளைப் பிரித்தேனின்னூல்
சத்தியமாய்ப் பார்ப்பவர்க்குச் சத்திலுள்ள
சரியான செம்பெடுப்பார் தரணியோரே (1)

தரணிதனி லயச்செம்பு கெந்திச்செம்பு
தாக்கான காரீயச் செம்பினேடு
பாணிதனில் சொர்ணத்தின் செம்பினேடு
பதிவாக மிவையெடுக்கும் கைபாகங்கள்
வாணிப்பாய்ச் செந்தூரஞ் செய்யும்பாகம்
வாதிக்கி யின்னூலில் வரிசையாக
முரணியாய்ச் சொல்லிவிட்டேன் சுத்தியாக
மூத்தியா யாகோபு மொழிந்தேன்யானே (2)

மொழியென்ன உலகத்தில் வாதிமார்கள்
மோகமுற்று ரசவாதம் வேணுமென்று
பழியாகச் செம்பினுடன் கெந்திசேர்த்து
பாகமா உருக்கிடவே சத்துமாகும்
வழியாக யிச்சத்து தனைப்பிரித்து
வகையாகச் செம்பெடுக்க மாட்டாமற்ருன்
கழிவாகச் செம்புவெள்ளி தன்னைச்சேர்த்து
கணக்கிட்டு ஊதியுமே காணுர்தாமே (3)

காணுமற் கண்டுதான் செம்பெடுக்கக்
கருதியே அயச்செம்பு கருதிக்கேளு
நாணுமல் நல்லசெம்பு பலமும்பத்து
நல்லகுகை தன்னிலிட்டு உருக்கிக்கொண்டு
வாணுக அதையெட்டிப் பார்க்கும்போது
வண்மையாய்ப் பச்சைபோல தெளிவாய்க்காணும்
தோணுக யிப்படியே சமயம்பார்த்து
தொக்கவே செம்புனிடை கெந்திதானே (4)

கெந்தியைத்தா னுலாகப் பிரித்துக்கொண்டு
கெடியாக ஒருபங்கு செம்பில்தாக்கு
சுந்தரமாய் கெந்தியது சுளித்துஉள்ளே
சொக்கியே யிருந்திடுங்கான் குகையைமூடி
மூந்தியே உருகியது ஆடும்போது
முனிவாகக் குகைகொஞ்சந் தூக்கிவைத்து
நந்தியே சிலாகையால் குத்திப்பேறு
நலமாகத் தொப்பிபோற் கிளம்பும்பாரே (5)

கிளம்புமென்ற சத்தெடுநீ சிலாகையாலே
கீர்த்திபெறப் பின்புதான் ரவியுருக்கி
தளம்புகழப் பின்புமொரு பங்குகெந்தி
தாக்கிட்டு மூடியபின் னுருகியாடும்
வளமாகக் குகையைத்தான் கொஞ்சந்தூக்கி
வைத்துமே சிலாகையால் பேர்த்துக்கொண்டு
துளமாக யின்னுமொரு பங்குகெந்தி
துடியாகக் கொடுத்துமுன்போல் பேர்த்துக்கொள்ளே

பேர்த்துமே யிப்படிக்கிச் சத்தையெல்லாம்
பெருமையாய் மாவாக்கிக் குகையிலிட்டு
சார்த்துமே உருக்குமுகந் தன்னிற்றனும்
தாட்டிகமாய்ப் பொரிகாரங் கொஞ்சமிட்டு
பார்த்துமே உருக்கிடவே சத்துமாகும்
பதிவான சத்துவெங் கலம்போலாகும்
கார்த்துமே யிச்சத்துப் பெருமைதன்னை
கருணைபெற நபிமார்கள் கண்டார்தானே (7)

கண்டுமே அடியார்க்குச் சொன்னேன்சத்தை
காரணமாய்ச் செம்பெடுக்கச் சொல்லவில்லை
பண்டுமே சகலநூ லறிந்துபார்த்து
பதிவாகச் செம்பெடுத்து வேதைபோட்டேன்
மூண்டுமே பண்ணுமல் சத்தைப்பார்த்து
முடியமட்டுஞ் செம்பெடுத்து வெள்ளிதன்னில்
உண்டிடவே பாச்சிவிட்டுப் பொன்னைச்சேரு
உருதியாய்ப் பொன்னாகும் உத்துப்பாரே (8)

உத்துப்பார் முன்செய்த சத்துதன்னை
உறுதியாய்ச் சேரொன்று கல்வத்திட்டு
சித்துப்பார் சந்தானி சேருஒன்று
சிறப்பாகப் பொரித்திடவே நாலதாகும்
நத்துப்பார் யிரண்டாகப் பிரித்துக்கொண்டு
நலமாக ஒருபங்கு கல்வமிட்டு
சித்துப்பார் செவ்வரளிப் பூச்சாராட்டிச்
சிரப்பாக வில்லைதட்டிக் கதிரில்போடே (9)

போட்டுமே காய்ந்தபின்பு ஓட்டில்வைத்து
பிரபலமாய்ப் புடமென்ன கோழியாகும்
காட்டுமே யெடுத்துநீ கல்வமிட்டு
கனிவாகப் பொரித்தவெங் காரங்கூட்டி
நாட்டுமே முன்னீரா லரைத்துக்கொண்டு
நலமாக முன்போலே புடத்தைப்போடு
வாட்டுமே யிருத்துப்பார் பாதிரூபி
வகையாகச் சேர்த்துநீ பாணிஊத்தே (10)

ஊத்தியே அரைத்திட்டு சாமம்நாலு
உறுதியாய் வில்லைகட்டிப் புடத்தைப்போட்டு
பார்த்துயெடு கல்வமிட்டுப் பின்புகேளு
பதிவாக அரைபொடியைப் பழச்சார்விட்டு
காத்துமே மூணுநா ளூரவிட்டு
நலமாகப் புடம்போட்ட வில்லைக்கித்தான்
காத்துமே கால்வாசி சேர்த்துக்கொண்டு
கருணைபெறப் பழச்சாற்றிற் சாமம்மூன்றே (11)

சாமந்தான் மூன்றரைத்து வில்லைகட்டிச்
சரியாகப் புடமிட்டு யெடுத்துக்கொண்டு
ஏமந்தான் வெங்காரங் கொடுத்தசத்தை
எழுநூற்றிற் சொல்லிவிட்டேன் குகையில்வைத்து
நாமந்தா னுருக்கிடவே சொன்னேன்பாரு
நலமில்லை குகையுருக்கிச் செம்புவீணும்
தாமதமில் லாமலே நாலத்திட்டு
தப்பாமல் மேலூத்தா யுருக்கிக்கொள்ளே (12)

உருக்கிடவே செம்பாகுஞ் செம்புதன்னை
உத்தியெடு புதுக்குகையி லிட்டுப்பின்பு
நருக்கிடவே யுருக்கிச்சாய் பஞ்சமித்திரம்
நலமாகுச் செம்பாகுஞ் செம்புதன்னை
சுருக்கிடவே நொருக்குவெள்ளி போடாமற்றான்
கனமான வெள்ளிதனை நாலத்திட்டு
வருக்கிடவே கொடுத்தூதி வங்கந்தன்னை
வகையாகச் சுண்ணும்பு போலஊதே (13)

ஊதியே யெடுத்துப்பார் ஈயம்போக
ஊதாட்டால் யீயமது போகாதப்பா
பாதியே செம்பைத்தான கொடுத்தாயானல்
பரிவாகப் பழுக்காது பரிந்துபார்த்து
நாதியே துப்பரவா யூதிவெள்ளி
நலமாக நாலுக்கு ஒன்றுசெம்பு
கோதியே கொடுத்துருக்கி ஊதிப்போட்டு
குணமாகப் பொன்னிடைக்குச் சேர்த்திடாயே (14)

சேர்த்திடவே எடைசமனுய்ச் சேர்த்துருக்கி
சிறப்பாக யெடுத்துப்பார் மாத்துயேழு
ஆர்த்திடவே புடமிரங்கும் லாபமாகும்
ஆதரவாய் வைத்திட்டுச் சிலவுசெய்து
கார்த்திடவே நொருக்குவெள்ளி வைத்துக்கொண்டு
கனிவாக யிச்செம்பைக் கொடுத்துப்பொன்னை
நேர்த்தியாய்ச் சேர்த்திடவே காயைப்போலே
நிசமாக யெட்டரைதா னுகும்பாரே (15)

ஆகுமே முன்னூறு செந்தூரத்தில்
அடைவாகச் சொன்னசெந் தூரஞ்செய்து
ஏகுமே கொடுத்திடவே ரெம்பலாபம்
ஏழைமதி போகாமல் செய்துகொள்ளு
வாகுபெறத் தங்கமா மருவிப்பாரு
வடிவாக மிதப்பான நினைவைவிட்டு
பாகுபெறச் செய்தாக்கால் பலனுமாகும்
பதிவான யாகோபு தான்சொன்னேனே (16)

தானென்ற சத்தினுட கிராசச்செம்பு
தடையறவே சொல்லிவிட்டேன் தன்மைபாரு
வானென்ற அபச்செம்பு மார்க்கங்கேளு
வகையான துருசியது பலமும்பத்து
கானென்ற கெந்தியது பலமுமொன்று
காரணமாய் வீரமது பலமுங்கால்தான்
நானென்ற பழச்சாறு விட்டுஆட்டி
நலமாக மூவேழு நாள்தானட்டே (17)

ஆட்டியே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
ஆனபின்பு உப்புநேர் சுண்ணங்கூட்டி
வாட்டியே அரைத்துமே வில்லைமேலே
வகையாகக் கவசமிட்டுப் புடத்தைப்போடு
நாட்டிலே சொல்லாமற் கவசந்தன்னை
நலமாகப் பிரித்துமே தள்ளிப்போட்டு
கூட்டியே உள்ளிருந்த மருந்துதன்னை
குணமாகப் பார்த்திடவே கருப்புமாமே (18)

கருப்பாக உள்ளிருந்த மருந்தினோடே
கருப்பிளைத்தான் வில்லைக்கி அரைக்கால்சேரு
துருப்பாக எலுமிச்சம் பழச்சார்விட்டு
துப்பரவா யரைத்துவில்லை கதிரிற்காய்ந்து
நறுப்பாகப் புடமிட்டு யெடுத்துக்கொண்டு
நலமாகச் சந்தாணி பொரிகாரத்தை
விறுப்பாகச் சேர்த்துமே அரைத்துப்போடு
விதமாக யிப்படிக்குப் புடமுமஞ்சே (19)

புடமைந்துபோட்டவுட னெடுத்துநீயும்
புகழாக குகையில்வைத்து உருக்கவேண்டாம்
திடமாக நாளத்தில் வைத்துநீயும்
திட்டமா யுருக்கியெடு திரமாஞ்செம்பு
வடமாகச் செம்புதான் சத்தியாகும்
வடிவமென்ன யிச்செம்பை மதியிலெட்டு
கடமாக ரெண்டிட்டு உருக்கிப்பின்பு
கருத்தாகச் சொல்லுகிறேன் கண்டுபாரே (20)

கண்டுபார் மாத்தெட்டு உள்ளபொன்னை
கருத்தாக இடைசோத்து உருக்கித்திரு
வண்டுபார் சீவனத்துக் கிடமேயாகும்
வகையாக முன்னூறில் சொன்னேனப்பா
துண்டுபா ரிச்செம்பில் தங்கம்சேர்த்து
துடியாக உருக்கியே தகடாய்த்தட்டி
வண்டுபார் நாத்தமொடு கெந்திசேர்த்து
வடிவாக வீரனுமே கூடச்சேரே (21)

கூடவே சேர்த்தவுடன் சொல்லக்கேளு
குமரியாஞ் சோரதிலே விட்டுஆட்டி
ஆடவே தகட்டிற்கு மேலேபூசி
அடைவாகப் புடம்போடச் சிவந்துபோகும்
நாடவே மதிதனிலே இருபதுக்கொன்று
நாட்டிடவே தசமாத்தாம் நாடிபாரு
வாடவே பாகத்தை வகையாய்க்கண்டு
வடிவாகச் சேர்த்திடவே வழக்கமாமே (22)

வழக்கமாஞ் சத்துக்குத் துருசுவேணும்
வகையான கெந்திதா னயமும்வேணும்
தழக்கமாஞ் செம்புதான் பிரிக்கவேறாய்
தடையில்லாச் சந்தாணி கொடியோன்வேணும்
பழக்கமா யிவைகூடாப் போனதாலே
பழிகாரச் செம்பதுவும் பாரிலில்லை
கழக்கமாய்ச் சத்துவகை போட்டுப்போட்டு
காரணமாய்ப் பொய்யாகு மென்பார்பாரே (23)

பாரப்பா நீர்மூட வாதிதானும்
பதிவாக ஒன்றேடே ஒன்றைச்சேர்த்து
நேரப்பா பெரும்படியாய்ப் போட்டுப்போட்டு
நிலைக்கவில்லை யென்றுமே சொல்லிச்சொல்லி
தூரப்பா திரிவார்க ளலைந்துசுத்தி
துடிவாக மாத்தில்லை யென்பார்தோசி
ஆரப்பா யெனைப்போலே சொல்லப்போரா
அறிவில்லா மூடர்களே அறிந்துபாரே (24)

அறிந்துபா ரின்னமொரு நாகச்செம்பு
அடைவாகச் சொல்லுகிறே னறிந்துகேளு
செறிந்துபார் துருசதுவும் பலமும்பத்து
திறமான கெந்தியது பலமும்பத்து
பறிந்துபார் எலுமிச்சம் பழச்சார்விட்டு
பதிவாக நாளாறு அரைத்துச்சேர்த்து
கறிந்துபார் வில்லைகட்டிக் கதிரில்வைத்து
கனமாக உப்புநேர் சுண்ணங்கூட்டே (25)

கூட்டியே வில்லைக்கி அரைத்துக்கட்டி
குணமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
நாட்டிலே சொல்லாதே கறுத்துப்போகும்
நலமாகக் கல்வமிட்டுச் சந்தாணிகூட்டி
வாட்டியே அரைத்துவிடு பழச்சாற்றாலே
வளமாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
மாட்டியே புடம்போடு அஞ்சுதானும்
வடிவாக யெடுத்தபின்பு பாகங்கேளே (26)

பாகமென்ன சொல்லுகிறேன் பாகங்கேளு
பதிவாக நாகரசம் உடனேசேர்த்து
வேகமாய் வில்லைக்குக் காலுமாகும்
விருப்பமாய்ப் பழச்சாறு விட்டுஆட்டி
ஆகமாய்க் கதிரில்வைத்து காயப்போடு
அடைவாக உப்புநேர் சுண்ணங்கூட்டி
தாகமாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
தன்மையா யாகோபு தாக்கினரே (27)

தாக்கியே யெடுத்துப்பார் மஞ்சளாகும்
 தடையறவே குகையிலிட்டு உருக்கிம்பாரு
ரோக்கிபபார் பொன்போலே கண்விட்டாடும்
 நுட்பமாய்ச் செம்பெடுத்து மதியிற்பத்து
வாக்கிப்பார் ரெண்டிட்டுத் தங்கந்தானும்
 வடிவாக யிடைசமனுய்ச் சேர்த்துநீயும்
பாக்கியமா யூதியெடு பொன்னதாகும்
 பலனுக யாகோபு பதிந்தவாரே (28)

பதிவாக நாகத்தின் செம்பினேடே
 பலனுகத் தங்கமது யிடையேசேர்த்து
கதியாக உருக்கிமெள்ளத் தகடாய்த்தட்டி
 கணக்காக நாத்தமுடன் கெந்திசேர்த்து
விதியாகக் கல்வமிட்டு அரைத்துநீயும்
 விதயாகப் பூசியேபுட மூன்றிட்டால்
நிதியாக நொருங்கியே தூளுமாகும்
 நீனிலத்தில் யாகோபு சொன்னவாரே (29)

சொன்னபடி நொருங்கியதோர் குருவைத்தானும்
 சுருதிபெற மதியெட்டில் ரெண்டுதாக்கு
நன்னயமாய்த் தங்கமது பாதிசேரு
 நலமாக ஆணிக்கு யெட்டேயாகும்
இன்னிலத்தில் பிழைப்பாகு மிநதவேலே
 இதமாக நபிமார்க ளாடுமோட்டு
கன்னல்போல் சொல்லிவிட்டேன் கருணைவைத்து
 கருத்துணர்ந்து யாகோபு கண்டவாரே (30)

கண்டுயேடு நாகத்தின் செம்புதன்னை
 கதிபெறவே பொன்னுகும் ஆணிக்கொக்கும்
தொண்டுபடும் வேலையெல்லா மதன்பின்பாரு
 தொல்லுலகில் ரசவாதம் நிலைக்கும்பாரு
பண்டு நபிமார்கள் தானுமோட்டு
 பத்திரமாய்க் கண்டிடவே பலனுமாகும்
முண்டுதான் பண்ணும லின்னூல்தன்னை
 முழுதுமே சோதித்தா லுறுதியாமே (31)

உறுதியாய் மட்டத்தில் பொன்னைத்தானும்
உண்மையாய்ச் சேராதால் மாத்துமில்லை
அறுதியாய்த் தெரியாம லலைந்துகெட்டார்
அடைவாக அலையாமல் நுணுக்கங்கண்டு
தறுதியாய் ஆணும்பெண் சேர்ந்துபெற்ற
தனையொக்கு மட்டத்தில் பொன்னுசேர்ந்தால்
கறுதியே பிள்ளைபெற்ற பலனுமொக்கும்
கைகண்ட யாகோபு கருணைதானே (32)

தானென்ற கெந்தியுட செம்பைக்கேளு
சமுசயமில்லாத தொரு கருத்தைவைத்து
நானென்ற துருசதுவும் பலமும்பத்து
நளினமாய் கெந்தியது பலமும்பத்து
வானென்ற பழச்சாறு விட்டரைத்து
வகையாக யிருசாமஞ் சென்றபின்பு
கானென்ற வில்லைதட்டிக் கதிரில்வைத்து
கனிவாக யாகோபு கருவாய்த்தானே (33)

கருவாக வில்லைக்குக் கவசங்கேளு
கனிந்துமே உப்பிட்டுச் சுண்ணஞ்சேர்த்து
திருவாக ஆட்டியே கவசங்கட்டி
திறமாகப் போட்டெடுக்கக் கரியாய்நிற்கும்
தருவாக யெடுத்துமே காரங்கூட்டி
தகுந்ததொரு மணியாக வுருக்கிக்கொண்டு
விரும்பியே யிப்படிக்குக் காரங்கூட்டி
வேண்டியே யரைத்துப்புட மிட்டிடாயே (34)

இட்டிடவே யிப்படிக்குக் காரங்கூட்டி
இதமாகக் கொடியோனைப் பாதிசேர்த்து
கட்டிடவே பாணி தன்னாலாட்டிகொண்டு
கனிந்துமே உலரவைத்துப் புடமுமிட்டு
பட்டிடவே யெடுத்துருக்கச் செம்புமாகும்
பதிவாக பஞ்சமித் திரத்திற்சாய்த்து
கொட்டிடவே செம்பெடுத்து வைத்துக்கொள்ளு
கோடிகவ ரோடுமிது குணமாய்த்தானே (35)

குணமாகக் கருக்கன்வெள்ளி தன்னிலேதான்
குருமாய் வங்கத்தை ஓட்டிரெட்டி
தணமாகக் குடுத்தூதத் தங்கம்போலாம்
தாக்கிடவே யெடுத்துமே வைத்துக்கொண்டு
கணமாக மதியேழு செம்புமூன்று
சணக்காக யிவ்விரண்டு மிடையேசேரு
வணமாக மாத்தென்ன யெட்டுமாகும்
வடிவான யாகோபு சொல்லுவேனே (36)

சொல்லுவே னிச்செம்பை வைத்துக்கொண்டு
சுருதிபெற நபிமாரைத் தோத்தரித்து
நல்லதொரு மட்டமிடை பொன்னைச்சேர்த்து
நலமாக வுருக்கியெடு தங்கமாகும்
கல்லுவார் சிறிதுபேர் செம்பெடுத்து
சுருதியே வெள்ளிதனிற் கொடுத்துப்பார்த்து
அல்லுவசர் மாத்தில்லை யென்றுதள்ளி
அலைவார்கள் கையூணுக் காணந்தானே (37)

கையூணுக் காணமென்ன மட்டமாச்சு
காரணமாம் பொன்னுதான் தாயுமாச்சு
வையகத்தி லிரண்டுமே சேர்த்துநீயும்
வகையாக உருக்கிப்பார் லாபமாகும்
மெய்யாக விம்மொழிகள் நிசமதாகும்
விருதாவாய்ப் பார்த்தாக்கால் பலனுமில்லை
சையோகஞ் செய்வதுபோல் மனதையூனி
தவிக்காமற் செய்துநீ பாகம்பாரே (38)

பாகமாய் மட்டத்தில் பொன்னைரெம்பப்
பரிவாகச் சேர்த்தாக்கால் பலனுமாகும்
ஆகமாம் புடத்துக்குத் தங்கந்தானும்
அருகுகட்டும் பேராசைப் படவும்வேண்டாம்
யூகமாய்ப் பார்த்துமே செய்துகொள்ளு
உடலுயிர்போல் வேண்டியே யுகந்துசெய்தாற்
போகமாய்ப் பெருவாழ்வு வருகும்பாரு
புத்தியுள்ள வாதிகளே புகலக்கேளே (39)

புகலவே தேன்பூச்சி கொஞ்சங்கொஞ்சம்
புகட்டியே தேனெடுத்து ரெம்பச்சேர்க்கும்
அகலவே மட்டமதில் தங்கத்தாவை
அடைவாக மிதக்கவே சேர்த்துக்கொண்டால்
நகலவே ஆணிக்குக் கூர்மையாகும்
நல்மாகுங் குற்றமில்லை நாட்டுள்ளோர்க்கு
சகலமுந்தான் பாடுபட்டால் பலனுமாகும்
சரியாக யாகோபு சொன்னவாரே (40)

சொன்னதென்ன வாதத்திற் காதியாக
சுருதியா யெழுநூறுங் களங்குஞ்சொன்னேன்
நன்னயமா யதைக்குருக்கிச் சத்துமார்க்கம்
நலமாக இரண்டுமுன் னூறுஞ்சொனேனன்
இன்னிலத்தி லதைக்குருக்கி நூற்றன்பதாய்
இருந்துரைத்தேன் நூற்றன்ப துங்குருக்கி
கன்னல்போ லன்பத்தி யைந்துதன்னை
கருத்துவைத்துப் பார்த்தாக்கால் சித்தன்தானே (41)

சித்தராய்ப் போகவே சுண்ணக்காண்டம்
சிறப்பாக அறுநூறு பாடல்சொன்னேன்
முத்தரா யென்பாடல் சகலத்திற்கும்
மும்மூலச் சாவியைப்போல் முன்னூர்தன்னில்
நித்தியமா மீத்திரத்தின் மார்க்கத்தோடு
நிலையாகப் புடமார்க்கம் எரிப்பின்மார்க்கம்
சத்துநிற மரிதலோடு குறிப்பின்மார்க்கம்
சாங்கமாய் வகைதிகைபாய்ச் சொன்னேன்பாரே (42)

சொன்னதொரு நூலெல்லாம் பாண்டமாகும்
சுருதியென்றபஞ்சமித்திர முன்னூற்தானும்
கன்னல்போற் தடியாகும் பார்த்துதேரு
கருதியே தானுழைத்துப் பலனைக்காண்பாய்
முன்னமே சத்தைத்தான் பண்ணித்தேர்ந்து
முக்கியமாய்ச் செம்பெடுத்து மதியிற்சேர்த்து
நன்னயமாய் மட்டமிட்ட தங்கஞ்சேர்த்து
நாடியே விற்றிடவே சில்வுக்காமே (43)

ஆமென்ற பின்னுமொரு செம்புமார்க்கம்
அறைகிறேன் நபிமார்க ளறியக்கேளு
காமென்ற நல்லசெம்பை உருக்கிக்கொண்டு
சருத்தாக யிந்திடைக்குக் கெந்திதாக்கு
வரமென்றே வாங்கியது சத்துமாகும்
வகையான சத்தெடுத்துப் பலமுமெட்டு
தாமென்ற வீரமது பலமுங்காலாம்
தடையறவே யிட்டுமே பாணிவிட்டே. (44)

விட்டுமே யறைத்துப்பார் மஞ்சள்போலாம்
விதமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நட்டுமே வில்லைதான் காய்ந்தபின்பு
நலமான உப்பதுவைக் கவசங்கட்டி
பட்டுமே காடையென்ற புடத்திலிட்டு
பதிவாக யெடுத்துமே கல்வத்திட்டு
சுட்டுமே புடம்போட்ட யிடைக்குக்கேளு
சுழுவான சுருப்பியைத்தான் ஊறப்போடே. (45)

ஊரவே எலுமிச்சம் பழச்சார்தன்னில்
உற்பலமாய் நாளாறு சென்றபின்பு
காரவே முன்போட்ட மருந்தினோடே
கருத்துறவே சேர்த்தரைத்துப் பழச்சார்தன்னில்
சேரவே வில்லைதட்டிக் கதிரில்வைத்து
திறமாகக் கோழியென்ற புடத்திலிட்டு
வாரவே வெங்காரம் பாதிசேர்த்து
வகையாக அரைத்துவில்லை கட்டிடாயே. (46)

கட்டியே புடம்போட்டு யெடுத்துப்பாரு
கருணைபெறச் சிவந்திருக்கும் வில்லைதன்னை
தட்டியே சாவலையில் வைத்துருக்கு
தனிச்செம்ப தாகுமே யிந்தச்செம்பு
பட்டியே கடைசிதனில் சொல்லிப்போட்டேன்
பதிவான நபிமார்க ளாடுஞ்செம்பு
துட்டியே செம்பெடுத்து வெள்ளிதன்னில்
துடியாகப் பச்சைவெள்ளி தன்னில்கேளே. (47)

தன்னிலே எட்டிரண்டு போட்டுருக்கி
தடையறவே எட்டரையா மாத்துப்பொன்னை
பன்னியே சேத்துருக்கு தாய்போலாகும்
பதிவான வாசறுமே நல்லசெம்பு
கன்னியமாய்ப் பார்க்குமந்தச் செம்பைவைத்து
கதிபெறவே சிலவுசெய்து நபிமார்போல
முன்னியே யிருந்துவிடு யாகோபுசொன்னர்
முடிவாகும் பத்தைந்தை யுணர்ந்துபாரே. (48)

உணர்ந்துபாா கெந்தியுடன் துருசுச்செம்பு
உத்துமே சேர்த்துவிடச் சத்துமாகும்
கணாந்துமே சத்திலுள்ள செம்பைத்தானும்
காரணமாய்ப் பொரிகாரி பண்ணேசேர்த்து
வணர்ந்துமே புடம்போட்டுச் செம்புருக்கி
வகையாக மதியெட்டில் தாக்குவீருய்
தணர்ந்துமே யேமமதை இடையேசேர்த்து
தாக்கிடவே பொன்னுகுந் தன்மைபாரே. (49)

தண்மையா யிருந்துமே செம்பைக்கண்டு
தாட்டிக மாயெடுத்துநீ சார்வுபார்த்து
உண்மையா யொருவருக்குஞ் சொல்லாமற்முன்
உத்துமே செய்துவிட்டு முடித்துநீயும்
வண்மையாய் வணக்கம்மாய் நினைவுகொண்டு
வடிவாக மனமதுவைச் செலுத்தியேதான்
கண்மையாய் செம்பதுவைப் போசித்துப்பார்
கருதியே யாகோபு கருணைதானே. (50)

கருணையா யயச்செம்பு சாஸ்திரத்தில்
கருத்தாகச் சொல்லவில்லை நானுங்கண்டு
வருணைபார் மக்காவின் தேசம்புக்கி
வடிவாக நூலெல்லாஞ் சோதித்தேன்பார்
தருணமா யிந்தநூல் தன்னிற்தானும்
தடையறவே சொல்லிவிட்டேன் சார்ந்துபார்த்து
பருணையாய் கைபாக வரிசைபாடி
பதியாக யாகோபு பகர்ந்தார்தானே. (51)

பதிவாகப் பொன்னில்லா வாதமெல்லாம்
பதிலைவிட்டு பெரிந்துவிடு பாரிலோர்க்கே
கெதியாகத் தருசில்லாச் சத்துவெல்லாம்
கெட்டியாப்த் தூரயெரி கேள்வியாலே
விதியாகச் சத்துதனில் செம்பைத்தானும்
விதமாக வெடுத்தாக்கால் விளக்கமாகும்
சதியாகக் கைபாக வரிசையில்லாச்
சதியான பாகமெல்லாந் தடையுமாமே. (52)

தடையில்லா என்னூலை முழுக்கப்பார்த்து
சஞ்சலத்தை விட்டுமே படித்துத்தேரு
படையில்லாவேலையெல்லாம் பொய்யதாகும்
பார்த்தங்கு செய்பாட்டால் பலனுமில்லை
இடையில்லாக் குகைபாகம் பருவங்கண்டு
இதமான உலைபோடும் விதமறிந்து
கடையான உலைக்கூடங் கருணைபார்த்து
காதலாய்ச் செய்திடவே கண்டுபாரே. (53)

கண்டில்லா நூலினுட மர்மங்கண்டு
காதலாய் குணபாகங் கருத்தைப்பூண்டு
வண்டிலுள்ள செம்பதனின் சத்துச்சேர்த்து
வடிவான செம்பெடுக்க வழக்கங்கண்டு
பண்டுள்ள மனம்போல நினைவைவைத்து
பதிவாகப் பார்த்திட்டு பதிவுகண்டு
தண்டித்து வேலைசெய்தாற் பாகமாகும்
தாட்டிகமா யாகோபு தாக்கினாரே. (54)

தாக்கியே யிந்தநூ லன்பத்தஞ்சும்
சரிவரவே பார்த்திட்டுப் படித்துக்கொண்டு
நோக்கியே மனதிலெண்ணிச் சோதித்தேரு
நுணுக்கமாய் பாகமதைக் கண்டுதேரு
பாக்கியமாம் பாடலைத்தான் கண்டுதேர்ந்து
பார்த்துநீ பதிவாகக் கண்டுபின்பு
வாக்கினிலே நினைந்திட்டுச் செய்துகொள்ளு
வடிவான யாகோபு நூல்தான்முற்றே. (55)

செந்தூரம் கருமக்கு சூஸ்திரம் நிமடு-ம்

முற்றிற்று.

உ

பரமபதிதுணை.

விளம்பரம்.

மகா நிபுணர்களான பதினெண் சித்தர்களும் உலோபகாரமாகத் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய வாத யோக ஞான சாஸ்திரங்கள் அனந்தமிருப்பினும் அவைகளை ஷை சித்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சாஸ்திரக்கோர்வையாகவே சொல்லியிருக்கிறார்கள் அதில், சில நூல்கள் அச்சுக்கு வந்தும் வராமலுமிருப்பதால், சுண்ண செந்தூர முதலாகிய மருந்துகளை செய்யும் வைத்தியர்கள் பலரும் அம்மருந்துகளாற் பயனடையாமலிருப்பது ஷை சித்தர்களின் கோர்வைநூலகப்படாத குறைகளேயாம். நிற்க,

பதினெண் சித்தர்களுள் ஒருவரான இராமதேவர் என்ற யாகோபு அவர்கள் மக்கத்திற்சென்று ஆங்கு நபிகள் சபாசென்று சொல்லும்படி கூறியருளிய வைத்திய வாத சாஸ்திரங்கள் பதினேழும் ஓரே கோர்வை நூலாகக் கிடைக்கப்பெற்று அச்சிட்டு முடிந்தது. இந்த நூற்களை வாங்கிப்படித்துத் தேர்ந்தவர் சுண்ணசெந்தூர முதலிய மருந்துகளைச் செய்துமுடிக்கும் வைத்தியவாத பண்டிதத்திற் சிறந்தவராவரென்பதற்குச் சந்தேகமில்லை.

மகத்துவமிகுந்த திருவள்ளுவர் கூறியருளிய கோர்வை நூல்கள் கீழ்கண்ட விபரப்படி பத்தம், மேற்கண்ட யாகோபு அவர்கள் கோர்வை நூல்களைப்போல் சரிவரக் கிடைக்கப்பெற்று அச்சிட்டுக்கொண்டு வருகையில் பஞ்சரெத்தினம் 500 என்னும் புத்தகத்தை மாத்திரம் கூமாப்பட்டி சாமியாரென்னும் ஒருவர் வாங்கிப்பார்த்துக்கொண்டிருந்தவர் என்ன காரணத்தினாலோ தம்மூரிற் கொண்டுபோய் வைத்துவிட்டு சமாதியாகினர். அதனைக் கேள்வியுற்ற யான் அந்த நூலுக்காக அவரிருந்த இடத்திற்போய்ப்பார்த்தும், தேடியும் நூற்கிடைக்கவில்லை: அப்பாலதைநீக்கி மற்றசாஸ்திரங்கள் யாவையும் அச்சிட்டுமுடித்தேன். இப்பொழுது அச்சிட்டிருக்கும் ஒன்பது சாஸ்திரங்களின் விபரம்:—

ஞானவெட்டி 1500 ரூ 1. | நவரத்தின சிந்தமணி 800 ரூ. 1

கர்ப்ப சாஸ்திரம் 300, நாதாந்த சாரம் 100, செவுன சாஸ்திரம் 100, குருநூல் 50, முப்பு சாஸ்திரம் 30 வாத சூஸ்திரம் 16, முப்பு சூத்திர சுருக்கம் 11-ம், ஆக ஏழு சாஸ்திரங்களும் ஒரேகட்டமாக அச்சிட்டது ... ரூ. 1.

எம்மிடமில்லாத பஞ்சரத்தினம் 500 என்னும் நூல் அனுப்புவோர்க்கு தமது நாமதேயத்துடன் அச்சிட்டு அன்பார்ந்த வந்தனத்துடன் 10 புத்தகங்கள் இனமாக அனுப்பக்கூடும்.

இப்படிக்கு, இ. ராம. குருசாமிக்கோன்,

புஸ்தக ஷாப், புதுமண்டபம், மதுரை.

விளம்பரம்.

இராமதேவரென்ற யாகோபு அவர்கள் திருவாய்மலர்ந் தருளிய வைத்திய வாத சாஸ்திரங்களின் விபரம்.

1	யாகோபு வைத்திய சிந்தாமணி	700
2	௸ சூஸ்திரம்	50
3	௸ லோக செந்தூரம்	300
4	௸ செந்தூர சூஸ்திரம்	155
5	௸ செந்தூர சூஸ்திரச் சுருக்கம் ...	55
6	௸ சுண்ணக் காண்டம்	600
7	௸ சுண்ணம் ...	300
8	௸ சுண்ண சூஸ்திரம்	150
9	௸ சுண்ண சூஸ்திரச்	55
10	௸ வாதக்களங்கு	300
11	௸ பஞ்சமித்திரம்	300
12	௸ வாத வைத்தியம்	400
13	௸ வைத்தியம் ...	300
14	௸ வைத்தியசூஸ்திரம்	50
15	௸ தண்டகம் ...	110
16	௸ இடைபாகம்	16
17	௸ செய்பாகம்	16

௸ சாஸ்திரம் 17-க்கும் கல்லாடர் அரும்பதவுரையும் ஆக 12 புத்தகமாக அச்சிட்டிருக்கிறது மொத்தமாய் வாங்குபவர்களுக்கு ரூ 7-0-0 வீதம் கொடுக்கப்படும்.

இந்த அரிய சாஸ்திரங்களை வைத்தியவாத வல்ல நிபுணர்கள் ஒவ்வொருவரும் வாங்கிவாசித்துக் கைபாக செய்பாக இடைபாக முறைகளைக்கண்டு நன்கு தெளிந்து ஔடதங்களைச்செய்து முடித்துப் பிரயோகஞ் செய்வீர்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்

இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய வாத சாஸ்திரங்களின் விபரம்.

1	இராமதேவர்வைத்தியம்	1000
2	௸யார் ஜாலம் ...	800
4	௸யார் நிகண்டு ...	500
3	௸யார் கருக்கடை....	500
5	௸குருநூல் பரிபாஷை	300
6	௸யார் சிவயோகம் ...	200
7	௸யார் தண்டகம் ...	110
8	௸யார்தண்டகபட்சணி	109
9	௸யார் பரஞானகேசரி	100
10	௸வைத்திய சூஸ்திரம்	83
11	ராமதேவர் சரக்குவைப்பு	51
12	௸ அஷ்டாங்கயோகம்	50
13	௸ முப்புசூஸ்திரம்...	30
14	௸ பரிபாஷைசூஸ்திரம்	27
15	௸யார் ஞானத்திறவு	16
16	௸ குருநூல் சூஸ்திரம்	16
17	௸யார் பூஜாவிதி ...	16
18	௸யார் ஞானம் ...	10
19	௸யார் பரிபாஷை ...	18
20	௸யார் வைத்தியம் ...	8

இந்த சாஸ்திரங்கள் என்னிடமிருந்த ஓலைப்பேட்டுப் பிரதிகளின்படி அச்சிட்டுக்கொண்டு வருகிறேன் கூடியசீக்கிரம்வெளிவரும்

எமது புஸ்தகஷாப்பில் இன்னும் வேண்டும் புத்தகதினுசுகள் தயாரிலிருக்கிறது. வேண்டியவர்கள் நேரிலும் வி. பி. மூலமாயும் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ இராம. குருசாமிக் கோன்,

புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதி துணை.

NEW CATALOGUE OF BOOKS.

புதிய புத்தக கேட்லாக்.

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புத்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

சித்தவைத்திய அகராதி,

(இது ஓர்பெரிய வைத்திய அகராதி.)

இதில் பச்சிலை, கடைச் சரக்கு, பஞ்சபூதச் சரக்கு, உபரசச் சரக்கு, 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், வகாரம், செந்தூரம், செய்ய சரக்குகளின் உருக்கின சத்துரு மித்துருவையும், புளியாகுஞ் சரக்குகளின் விபரத்தையும், 64 பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது. சித்தர் நூல்கள் ஆராய்ச்சி செய்வோர்களும், வைத்தியஞ் செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புத்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பார்த்து இதினுண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன் 280 பக்கங்கள் கொண்டது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

அகத்தியர் பரிபாஷை 300,

ஓலை யேட்டுச் சுவடியிலிருந்து இப்பொழுது புதிதாய் வெளி வந்தது (அகஸ்தியர் பரிபாஷைத் திரட்டு 500) என்று ஒரு நூல் இருந்து வருகிறது இது புதிதாக இப்பொழுது அச்சிட்டது,

புத்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100, கற்பக் குருநூல் 50, முப்பூ சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, முப்புக்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500, க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும் இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும் முப்பூ விபரமும், வழலை மார்க்கமும் தெளிவாகக் கூறியுள்ளது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. **0—14—0**

யூகிமுனிவர் 1200

கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டும் சேர்ந்தது.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கைவசமாய் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ **2—0—0**

அகத்தியர் சௌமிய நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளி வராமல் ஏட்டுப் பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது அவர் இதை தன்னனுபவத்தில் வைத்துக் கையாண்டு வந்ததை வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும் பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதில் வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகத் தெளிவாகச் சொல்லியுள்ள அருமையான சாஸ்திரம்.

புத்தகம் 1க்கு விலை அணா 0—12—0

இதுவரை எட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்து கொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடையும் மார்க்கமும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு மித்துரு விபரங்களும் சொல்லியுள்ளது.

கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமான

பன்னிருகாண்டம் 200.

இது அகத்தியர் பன்னீரா யிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிரு காண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1-வது வைத்திய காண்டம், 2-வது வாத காண்டம், 3-வது சுண்ணக்காண்டம், 4-வது செந்தூரக் காண்டம், 5-வது பற்பகாண்டம், 6-வது தைலக்காண்டம், 7-வது கற்ப காண்டம், 8-வது யோக ஞான காண்டம், 9-வது தீட்சாவிதி காண்டம், 10-வது சாபநிவர்த்தி காண்டம், 11-வது ஜாலகாண்டம், 12-வது மந்திர காண்டம், ஆக பன்னிருகாண்டமா யுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள முக்காண்டம் 1500ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்குந் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காமலிருந்து இப்பொழுது ஒரு எட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலைஅணா 0—10—0

அகத்தியர் கற்ப மூப்புக் குருநூல்

இதில் கற்ப விதிகளும், முப்பூ முடிக்கும் விபரமும், பற்பம் செந்தூர கைபாகஞ்செய்பாகமுறைகளும், சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோணச் சக்கரத்தின் பூஜா விதிகளும், கற்ப தீட்சை முறைகளும், தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

இராமதேவர் வைத்திய காவியம் 1000.

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சாக்குகளும், தைல முறைகளும், வைத்திய முறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கரு மான விபரங்களும், பஞ்ச பூதங்களின் விபரமும், பற்பம் செந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்க யோக முறைகளும், முறையோடு விபரமாய்க் கூறியிருக்கிறது.

புஸ்தகம் 1க்கு விலை 1—0—0

ஷையார் சிவயோகம் 200 புத்தகம் 1-க்கு அணு 0 6 0

விஷவைத்தியமென்னும்

"ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிஷ ஆரூடசாஸ்திரங்களைச் சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய்,குரங்கு, பூனை, முத லானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைக ளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்ப தோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்பசாதனைகளின் விபரங்களையும், யோகஞான மார்க்கத்தையும், அகார உகார விபரங்களையும், வாசி யோகஞ் செய்யும் முறைகளையும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல், தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரிதியிலிருந்து புதிதாய் அச்சிட்டது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300.

இந்தச் சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குறிய செம்புவேதை, செம்புச் செந்தூரவேதை, துருசுச்செம்பு எடுக்கும் விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி 'தைலத்தின் பெருமையும் அதினால் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஸ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—8—0

தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200.

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணா 0—8—0

கருவூரார் வாதகாவியம் நொண்டி 700.

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பாவாகவும், சிந்தாகவும் பலமாதிரி சந்தங்களாய் விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் 1 க்கு விலை ரூபாய் 0—14—0

போகர் கற்பம் 300.

இதில் அமுரி கற்பம் சாப்பிடும் விதமும், அதை எந்தவிதத்தில் முரித்துச் சாப்பிடுகிறது என்பதும், அதை எப்படி உபயோகிப்ப தென்பதும் கற்பம் சாப்பிடுங் காலத்தில் ஏற்படக்கூடிய சூடு சோப தாபங்களுக்கு வேண்டிய சிஷாயங்களும் அதுசமயம் ஸ்நானம் செய் யும் முறையும், கற்பம் சாப்பிடும் போது புளி உப்பு பெண்போகம் கூடாதென்பதின் காரணமும், அக்குற்றங்க ளேற்பட்டால் அதற்கான சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய வகையும், கற்ப மூலிகை விபரங் களும், கருந்துளசி கருநெல்லி கருநொச்சி இவைகளை நாமே பயிர் பண்ணிக் கொள்ளவேண்டிய முறையும், வாத முறைகளுக்குத் தைல வகைகளும், சுத்தி முறைகளும், சிதம்பரத்தில் தங்க விக்கிரகஞ் செய்த விபரமும், சொல்லியுள்ள புதிய சாஸ்திரம்.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—10—0

அகத்தியர் ஐந்து சாஸ்திரங்கள்.

மணக்கோலம் 200, கணகமணி 100, வைத்தியக் கோவை 125, வைத்தியத் திரட்டு 81, கிருக்கு நூல் என்னும் கிரிகை 18 க்கும், குணமும்' நிவர்த்தி செய்யும் மருந்து பாகங்களும். அடங்கியது. ஆக 5 சாஸ்திரங்கள்.)

இதில் வயித்திய பாகங்கள் பாஷாணங்களில்லாது கடைச் சரக்கு களைக்கொண்டு எளிய முறையாகச் செய்து கொடுத்து சகல நோய்க ளையும், தீர்க்கு வண்ணம், கைபாகஞ் செய்பாகம், முறையோடு சொல்லி யிருப்பதோடு, மானிடர்க்கு, வாத பித்த சிலேற்பனத்தால் ஏற்படும், 18 விதமான கிறுக்குகளின் குணமும், அதை நிவர்த்திக்க மூலிகை களினால் மருந்தும், கலிக்க வகைகளும், நசிய வகை களும், துவாலை வகைகளும், தெளிவாய்க் கூறியுள்ள அரிய பெரிய சாஸ்திரம் இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய தவசியம் அவரவர்களே மருந்துகள் செய்து கொடுத்து வியாதியை குணப்படுத்திக் கொள்ளும் முறைகளாய் அடங்கியுள்ள சாஸ்திரம்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0--12—0

காக புசுண்டர் 1000.

சித்தர்களில் ஒருவராகிய புசுண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறூர். ஆனல் இது வரை சில சாஸ்திரங்கள் மட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷை யாரால் பாடியதில் முக்கியமான இப்புசுண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்பொழுது புதிதாக அச்சிட்டிருக் கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரமும் கற்பம் என்பது தன்னுள்ளே முடிந்திருக்கிறது என்ற விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

அகத்தியர் தற்க சாஸ்திரம்.

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது. இதில் பதினெண் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோகஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மமான பதங்க ளுக்குத் தாத்பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணு 0—10—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

யாகோபு வைத்திய கோர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்றுநபிமார் களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள் பின்பு யூனனிமுறை களையும், தமிழ் முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்தி களையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறூர். இந்த சாஸ்திரத்தை அநேகர் வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறூர்கள் 17-சாஸ்திரமும் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் 17 சாஸ்திரங்களையும் 12 புஸ்தகங்களாகப் பயிண்டு செய் திருப்பதால் தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நந்தீஸ்வரர் நிகண்டு 300.

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினால் வாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைக ளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

உரோமரிஷி பரிபாஷை 300.

இதில் பரிபாஷைப் பெயர்களை விளக்கிக் கூறியிருக்கிறது, இவர் பாடிய நூல்கள் அனேக மிருப்பினும், வைத்தியம் 500 என்றநூல் மட்டுந்தான் அச்சிட்டு வெளிவந்திருக்கிறது இன்னும், கூடியசீக்கிரத்தில், இவரால் பாடிய சாஸ்திரங்கள் அச்சிட்டு வெளிவரும், இப்பொழுது இந்த பரிபாஷை 300 அச்சிட்டு தயாரிலிருக்கிறது.

புத்தகம் 1 க்கு விலை அணா 0—8—0

கோடாங்கி மாலை. 1-2 பாகங்கள்

இது கோடாங்கி அடிப்பவர்களுக்கும், சுவாமி அருள் பொங்கிக் குறிசொல்பவர்களுக்கும் சுவாமி ஆடிகளுக்கும், ஆரூடம் சொல்பவர்களுக்கும், பேயோட்டுபவர்களுக்கும், முத்துக்குறி சோதிடம் பார்ப்பவர்களுக்கும் முக்கியமானது. பலதேவதைகளின் பெயர்களும் கிராமங்களின் பெயர்களும் குறிசொல்லுகிற விபரங்களும் ஆங்காங்கு தெளிவாக யாவரும் அறியும் வண்ணம் கூறியிருக்கிறது.

பாகம் 1-க்கு விலை அணா 0—3—0

அருணகிரிநாத சுவாமிகளால் இயற்றிய

பெரிய கந்தரனுபூதி

யந்திர மந்திர சக்கர பூஜாவிதிகளுடன் கூடியது.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 0--3—0